57

Regd. No. M. 878.

JAN 1922

தொகுதி 12. பு[illegible] 6.

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை,
நாகரீகம் இவைகளைப் பரவச் செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

துன்மதி௵ புரட்டாசி-ஐப்பசி௴
1921௵ செப்டம்பர்-அக்டோபர்௴

விஷயங்கள்.

1. தற்காலப் போக்கும் நமது கடமையும் 97
2. மாதாஶ்ரீ அன்னிபெஸண்டு அம்மையவர்களின் தோத்திரம் செய்யுள் 105
3. அதீந்திரியத்தின் உண்மை 109
4. பிரமாணங்கள் 120
5. பாலிய இந்தியாவின் கூக்குரல் 124
6. பத்திரிகை விமர்சனம் 129
7. பகவத்கீதை 131
8. பணப்பண்புகளின் சேர்க்கை 136
9. [illegible] 141

அ. அரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷசந்தா இந்தியாவுக்கு 2—0—0
அன்னிய நாடுகளுக்கு ரூ. 2—8—0 தனிப்பிரதி அணா 4
மதுரை விக்டோரியா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

1921

பட்டங்களுடன் கூடிய கதைகள்.

சமீர்லாபம்—அல்லது நட்பின் மேன்மை		0—2—0
சிவாஜிமஹாராஜ்	ஆர். எஸ். நாராயணசாமி	0—2—0
குமணராஜன் —	ஐயர் பி. ஏ. பி. எல்.	0—2—0

அரிய ஞானக் களஞ்சியங்கள்.

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை
லோககுருவின் அவதாரங்கள்
ஹிந்து என்பவன் எவன்
காயத்திரி
காயத்திரி ராமாயணம்
சகோதரத்வம்
மகாலயபக்ஷமும் நவராத்திரியும்
ஸ்ரீ தேவாபி மருகுருநாதர்
தசாவதாரங்களின் உண்மை
எண்ணங்களின் ரகசியம்
திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.
லோககுருவாகிய பரமன் வருவானேன்

நம் குழந்தைகளும் நம்தேசத்துக்கு வருங்கால மகிமையும்.
டில்லிமாநகரில் சக்ரவர்த்தியவர்களின் பட்டாபிஷேகம்.

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் இரண்டணா.

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
தியாஸபியால் உள்ள பிரயோஜனங்கள்
சர்வசமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷணை
மரணபயம் வேண்டாம்.
சத்குரு பாதங்களில்.
சன்மார்க்கதீபம்
சத்தியா வர்த்தனம்

புஸ்தகங்கள் ஒவ்வொன்றும் மூன்றணா.

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளகூடாது?
(2) ஸ்தூல பிரபஞ்ச தர்மங்கள்—ஆத்ம தர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் தூரவஸ்தை
(7) கர்மநாசம் (8) சின்னங்கள் (9) கர்மம்

(10) குழந்தைகளை பழக்கும் முறையில் ஜாக்கிரதை பெற்றிருக்க வேண்டிய சுருக்கமான விஷயங்கள்.

தபால் சார்ஜ் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

57

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்

தொகுதி 12	துன்மதி௵ புரட்டாசி—ஐப்பசி௴ 1921௵ செப்டம்பர்-அக்டோபர்௴	பகுதி 5, 6,

தற்காலப் போக்கும் நமது கடமையும்.

தற்காலப் போக்கைக் கவனிப்பார் எவரும் அதன் சிற்சில அம்சங்களைக் கண்டு கவலை கொள்வார்களென்பது திண்ணம். எவ்வித அபிவிருத்தியும் மனிதருடன் மனிதர் போராடுதலால் மாத்திரம் ஏற்படுகிறதென்றே தற்காலத்தவரிற் பலர் கூறுவர். தற்கால நாகரீகத்தின் குறிகளான சிற்சில விஷயங்களை இவ்வியாசத்தில் விசாரிப்போம்.

***

பெருநிதி கொண்டு பெருவாரியாய் வணிகஞ் செய்பவர்களும் தொழிற் சாலைகள் முதலியவற்றைத் தாபித்துத் தொழிலாளர் முதலியோரை வைத்து நடத்துவோரும் தமது சிப்பந்திகளோடு அடிக்கடி சச்சரவுகள் செய்து அவர்களுடைய மனஸ்தாபத்தைச் சம்பாதித்துக் கொள்கின்றனர். தனவந்தரான முதலாளிகள் வறியரான தமது சிப்பந்திகளின் கஷ்டங்களைக் கவனித்து அவைகளை நிவ

ர்த்தி செய்வது அபூர்வமேயாம். அவ்விதமே சிப்பந்திகளும் சில சமயம் தமது உரிமைகளை மாத்திரம் கவனித்து தமது முதலாளிகளின் சிரமத்தைச் சிறிதும் கவனிப்பதில்லை. இருதிறத்தாரும் தத்தமது உரிமைகளையே காப்பாற்றப் பாடு படுகின்றனர். ஆனால் தங்களது கடமைகள் விஸ்தாரமானவை என்ற நினைப்பு அவர்களிடம் பெரும்பாலும் உண்டாவதில்லை. இருதிறத்தாரும் ஒத்தமனதுடன் நடந்து கொள்ள வேண்டியதிருக்க, இருவருக்கும் முரண் ஏற்படுவது நாம் அனுபவத்தில் பார்க்கும் விஷயமாகும்.

***

தொழிலாளர் இயக்கமென்பது நூதன இயக்கமே. தொழிலாளர் குறைகளும் துன்பங்களும் அனந்தம். அக்கூட்டத்தாருள் (அதுவும் விசேஷமாய் தமது நாட்டிலோ) ஒற்றுமையென்பது போதிய வளவில்லை. ஆயினும் அவர்களனைவரும் எக்காரணத்தாலாவது திடீரென ஏகோபித்து வேலை நிறுத்தஞ் செய்து விட்டால் முதலாளிகளுக்கும் பெருவாரியான நஷ்டம் சித்திப்பதுமன்றி நெடுங்காலம் இவ்வேலை நிறுத்தம் நடைபெறுமாயின், அதனால் தொழிலாளரும் பொது ஜனங்களும் பெருந்துன்ப மடைவார்கள் என்பது திண்ணம். வேலை நிறுத்தம் செய்தல் என்பது முதலாளிகள் தொழிலாளர்கள் ஆகிய இவ்விருவர் கையிலும் அகப்பட்டுக் கிடக்கும் பயங்கரமானதோர் ஆயுதமாகும். இவ்வபாயம் ஜனசமூகத்தில் நேராதவாறு கவனித்தல் நமது பெருங்கடமையாகும். சீமை நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் சில காலமுன்னர் வேலை நிறுத்தம் செய்த போழ்து அத்தேசத்திற்கேற்பட்ட பயத்திற்கும் அபாயத்திற்கும் அளவில்லையாம்.

***

இது போன்ற சம்பவங்கள் இது கலிகாலம் அதாவது சண்டை அல்லது சச்சரவுக் காலம் என்பதை உணர்த்துகின்றன. இத்தகைய நாகரீகத்தில் சகோதரத்வம் அன்புமுத

ஷிய நற்குணங்களுக்கு இடமெங்குளது என்று சிலர் ஐயங்கொள்ளலாம். ஆயினும் அறிவாளிகள் பலரும் இவை ஜன சமூகத்திற்கு நன்மையைத் தரா வென்றுணர்ந்து தொழிற்சாலைகள் வைத்து நடத்துபவர்களும் தொழிற்சாலைகளில் வேலை செய்வோர்களும் தங்களுக்குள் வழக்கு நேரிடின் மத்தியஸ்தமாய் நிற்கும் ஓர் கமிட்டியாரிடம் சென்று தங்கள் வழக்கைத் தெரிவித்து அவர்களுடைய தீர்மானப்படி நடப்பதே சாலச் சிறந்த மார்க்கமென்று அநுபவத்தில் அறிந்துள்ளார்கள். அவ்விதமே மத்தியஸ்த கமிட்டிகளும் தொழிற்சாலை நடக்கும் பலவிடங்களில ஏற்பாடாயிருப்பதும் பலவிடங்களில் அவர்களுடைய தீர்மானத்தையே முடிவாய் இருதிறத்தாரும் அங்கீகாரம செய்து நடந்துவர ஒப்பியிருப்பதும் குறிக்கததக்கது. செல்வபலம் ஒரு புறமும் ஆள்பலம் வேறோர் புறமுப் நின்று போர் புரிந்தால் இருவிதப்பலமும் இளைத்து இறுதியில் அவையிரண்டும் பொது மக்களின் வாழ்க்கையையும் பாழ்படுத்துவதாகும். இத்தகைய துர்க்கதி நேரா வண்ணம் நாம் தொழிற்சாலை சம்மந்தமாய்ப் பல சீர்திருத்தங்களைச் செய்யவேண்டியது அவசியம். அவற்றில் முதலாவது இது போன்ற மத்தியஸ்த கமிட்டிகளை ஏற்படுத்தி அவற்றின் தீர்மானம் இருதிறத்தாராலும் அங்கீகாரஞ் செய்யப்படுமாறு செய்வதேயாம். தொழிற்சாலை சம்மந்தமான அவஸ்தைகளினின்று நாம் நீங்கும் வழி இதுவாகும. முதலாளிகள் தொழிலாளர்கள் ஆகிய இருவரும் ஏககுடும்பத்தினர் என்ற உணர்ச்சி பரவுதற்கு முதற்படி இதுவே யெனத் தோன்றுகின்றது. ஆதலின் இஃதோர் நற்குறியன்றோ?

***

சர்வதேசங்களையும் இதுகாறும் பிடித்து வாட்டிவந்த பேய் யுத்த மென்பதாகும். நமதுலகின் சரித்திரத்தில் யுத்தஞ் செய்யாத காலமென்பது கிடையாது. இது மனிதனுடைய மனத்தின்கண் மறைந்து கிடக்கும் மிருகபுத்தி

யைக் காட்டுகின்றது. அவனுடைய தெய்வீகச் சக்தியைக் காட்டுவதில்லை. அரசர்கள் தம் தேசங்களிலுள்ள ஏழை மக்களின் வரியைப் பெற்று வாணவேடிக்கை செய்வதைப்போல் அப்பொருள்களைப் போர்முகத்தில் புகையாக்குதற்கு லக்ஷக்கணக்கான உயிர்கள் மாய்வதற்குக் காரணமாயிருப்பதுவும், கோடிக்கணக்கான ஜனங்கள் அங்க ஹீனர்களாய்த் தள்ளாடித் தபித்து வாழ் நாட்கழிக்கும் நிலைமையை அடையச் செய்வதும் உயுத்தமல்லவா?

***

இத்தீச்செயல் அடியோடு உலகினை விட்டொழிய வேண்டுமென்பதே உலகின் பக்குவிகள் கருத்தாகும். அஃது பண்டை நாளில் எவ்வாறிருந்திருப்பினும் இனியேனும் அவ்வாறு நிகழா வண்ணம் ஜனசமூகத்தில் ஓர் பெருத்த மனவுறுதி யுண்டாகுமாறு செய்தல் நமது இளைஞர்களின் பெருங்கடமையாகும்.

***

இதனைக்கூறுமிடத்து நாம் நமது தேசத்தைப் பாதுகாக்கத் தயாராயிருத்தல் கூடாது என்பது அல்ல. அவசியமாயின் எவருமே தத்தம் நாட்டைக் காக்கச் சித்தமாயிருத்தல் வேண்டும். பிற தேசத்தாரொடு வலியப் போர்புரிய நாம் போதல் கூடாது. ஸ்வராஜ்யம் என்ற பிறப்புரிமையை இந்தியர்களான நாம் பெறுவதாயின், நந்தேசத்தைக் காப்பாற்றுமாறு நமது உயிரையும் அளிக்க நாம் தயாராயிருத்தல் அவசியமன்றோ? சுதேசப் பாதுகாப்பும் ஸ்வராஜ்யமும் இணைபிரியாததோர் பிணைப்பாகும். தேசப்பாதுகாப்புக்கு ஆன்மபலமே போதுமென்றும் சேனைபலம் தேவையில்லையென்று நினைத்தல் பெரும் பிழையாகும். பம்பாயில் சென்ற வாரம் நிகழ்ந்த சம்பவங்களும் மலையாள ஜில்லாவில் சென்ற 3 மாசங்களாய் நிகழ்ந்துவரும் பெருங்கலகமும் ஆங்கு ஓடும் ரத்த வெள்ளமும் முழுதும் ஆன்ம பலத்தைக் கொண்டே தேசத்தைப் பாதுகாத்தல் சாத்தியமென்ற எண்ணத்தின் பயங்கரமான பிழையைத் தெரிவிப்பதாகும்.

சென்ற ஐரோப்பிய யுத்தம் நிகழ்ந்த காலத்து உலகில் அதுவே கடைசியாய்ச் செய்யப்பெறும் யுத்தமென்றும் அதன் பின்னர் யுத்தம் ஏற்படாதென்றும் பல அறிவாளிகளும் எண்ணினர். தாம் கொண்ட எண்ணங்கள் தவறென்று தற்போது நடைபெறும் துருக்கி கிரேக்க யுத்தத்தினால் அன்னோர் அறிந்திருப்பர். ஆயினும் நமது கடமை என்ன? உலகில் சமாதானம் நிலைத்து நிற்கத்தக்க முயற்சிகள் எங்கெங்கு நிகழப் பெறுகின்றனவோ அவற்றின் தன்மையை நாம் நன்கறிந்த பிறகு அவற்றில் ஸ்வீகரிக்கக் கூடிய பாகங்களைப் பலப்படுத்தல் வேண்டும்.

***

இவ்விஷயத்தில் சர்வதேச ராஜாங்கங்களும் யுத்தம் என்பது அறவே ஒழிவதற்கு ஏற்றபடியாய் பரஸ்பரம் ஓரளவு நம்பிக்கை காட்டி தங்கள் ராணுவ பலத்தைத் தாங்களே குறைத்துக் கொள்ளவேண்டுமென்ற நன்னோக்கத்துடன் அமெரிக்கா வாஷிங்கடன் நகரில் கூட யோஜனை செய்து வருவது உத்தம சுபசகுனமாகும். உலகில் பலமுள்ள தேசங்கள் அனைத்தும் தம் அதர்ம லௌகிக புத்தியைச் சிறிது விடுத்து தங்கள் கடற்படையையும் தரைப் படையையும் வேண்டுமெனவே சுருக்கஞ் செய்து ஐக்கிய வழியில் நடந்து கொள்ளவேண்டுமென்ற எண்ணத்துடன் கூடியிருத்தல் நாம் மகிழ்தற் குரிய காரியமாகும்.

***

ஒவ்வோர் அரசாங்கத்திலும் பிரஜைகளிற் சிலர் சச்சரவு செய்ய நேரின் தம் வழக்குகளைப் பொதுவான அரசாங்க நியாய சபையில் தெரிவித்து நியாயம் பெறுதல் நாம் யாவரும் அனுபவத்தில் அறிந்த விஷயம். அது போலவே தேசங்கள் சிலவற்றுள் மனஸ்தாபம் நேரின் உடனே ஸ்தூலப் போர் தொடங்கிவிடாமல் தம் வழக்குகளைச் சர்வ தேசங்களுக்கும் பொதுவான நியாய சபைக்குத் தெரிவித்து நியாயம் பெறுதல் எத்துணை மேலான மார்க்கம்! அத்தகைய பொது சபையொன்று ஸ்தாபிக்கப் பெற வேண்டுமென்று சில காலமுன் ஓர் முயற்சி உலகின் ராஜ

தந்திரிகளால் செய்யப்பெற்றது நேயர்கள் ஞாபகத்திலிருக்கலாம். இவ்வேற்பாடு இன்றும் பூர்ணமாய் நடந்தபாடில்லே. இவ்வேலே நமது தலைமுறையில் நடந்தேற வேண்டிய வேலையன்றோ? இது சம்மந்தமாய் ஜனங்கள் மனதில் உண்மையான நோக்கங்களும் எண்ணங்களும் உண்டாகுமாறு செய்தல் நமது கடமையன்றோ?

***

தற்போது வாலிபர்களா யுள்ளார் பலரும் இன்னுஞ் சில வாண்டுகளில் ஆண்மைப் பருவமடைவர். அப்பொழுது அவர் பெரியதோா உத்தரவாதத்தை வகிக்க வேண்டிவரும். இது முதலே சர்வதேச சம்பந்தமான ஐக்கிய வுணர்ச்சியைப் பரவச்செய்வது நமது பெரும்பாக்கியமன்றோ? இது போன்ற எண்ணமே உலகினின்று சண்டையென்ற பழியை நீக்குவதாகும்.

***

பண்டை நாளில் உலகின்கண்ணுள்ள மதங்கள் யாவும் ஒன்றேடொன்று பகைமையே பாராட்டிவந்தன. ஆயினும் அம்மதங்களே வெவ்வேறிடங்களில் பல வேறுகாலங்களில் உலகின் தேவைக்கேற்ப ஸ்தாபித்த பெரியார்களின் நோக்கும் அவைபோர் தொடங்கவேண்டுமென்பது அன்று. சமய வுணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பெற்ற யுத்தங்கள் உலகில் பலவிருந்தன. ஆனல் சுமார் 2000 ஆண்டுகட்குமுன் பாலஸ்தீன நாட்டில் அவதரித்த பேராசிரியான கிறிஸ்து என்பாரை சாமானியர் அறியொணுத உத்தம ஹிதோபதேசங்களே அன்னர் செய்ததன் பொருட்டுச் சிலுவையிலறைந்த முறட்டுக் காலம் எங்கே? தற்போது நாம் கண்கூடாகப் பார்க்கும் சமரஸ காலம் எங்கே?

***

முற்கால இந்தியாவில் செங்கோல் செலுத்தி வந்த மன்னர்கள் சிலர் மதசமரஸம் ஒருவாறு பாராட்டி வந்தாரென்பது உண்மையே. அவ்வைக்கிய புத்தி பெரிதும் தற்போது உலகெங்குமே பலப்பட்டிருக்கின்றது. பண்டைய

நாளிலோ பற்பல தேசங்களில் போக்குவரவுக்குரிய சாதனங்கள் பொதியவளவு ஏற்படவில்லை. ஆதலால் தேசங்களுக்குள்ளும் சமயங்களுக்குள்ளும் ஏற்பட்ட அறிமுகமும் குறைவாயிருந்தது. ஆனால் தற்காலத்தில் புகைவண்டிகள், தந்திகள், கம்பியில்லாத தந்திகள், வேகமாயச்செல்லும் புகைக்கப்பல்கள், சமாசாரப் பத்திரிகைகள் ஆகிய இக்கருவிகளால் ஜனங்களின் பொது அறிவு அதிகப்பட்டு அவர்களுடைய சமயவுணர்ச்சியும் ஒரு வாறு திருத்தம் பெற்று அஃது பெரும் அன்பின் வழிபற்றியே நிற்பதாகின்றது.

***

ஒவ்வொர் சமயமும் (Religion) சிற்சில சிறப்புத் தத்துவங்களை உலகிற்கு அளிக்கின்றதென்றும், இதனால்தான் சமயங்கள் யாவும் வெற்றுமைப் பட்டிருக்கின்றனவெனவும், ஆயினும் அவையனைத்திற்கும் பொதுவாயுள்ள தத்வங்கள் பலவுள்ளன வெனவும், எல்லாச்சமயங்களும் உலகிற்கு இன்றியமையாதனவெனவும் ஆயினும் ஒன்றைபொன்று விழுங்க முயலுதல் அபாயகாரமான காரியமெனவும் எத்தேசத்திலுமுள்ள அறிவாளிகள் தற்போது கொள்கின்றனர்.

***

மேற்குறித்த சமரஸபாவம் சாமானிய ஜனங்கள் மத்தியிலும் பரவுமாறு செய்தல் நம்கடமையாகும். அன்றேல் மதங்களனைத்திற்கும் பெரும்போர் தொடங்குவது திண்ணம். இது விரும்பற்பாலதன்று. ஒற்றுமையைப் பலப்படுத்தும் மார்க்கமே ஒப்பற்ற மார்க்கமாகும்.

***

சமயங்கள்யாவுமே உலகின் நன்மைக்கு எவ்விதம் இன்றியமையாதனவாய் நிற்கின்றனவோ, அவ்விதமே சர்வ மனுஷ்ய ஜாதியாரும் உலகின் முற்போக்குக்கு இன்றியமையாதவர்களேயாவர். மஞ்சள் நிறத்தார், சிவப்பு நிறத்தார், கறுப்பு நிறத்தார், வெண்மை நிறத்தார், பழுப்பு நிறத்தார் என்ற எல்லா வகுப்புக்களும் கடவுளின் ஒப்புயர்

வறற் அழகின் ஒவ்வோர் அம்சத்தைக் காட்டுகின்றனர். இவர்கள் ஒருவர்க்கொருவர் இதுகாறும் மெய்ச்சகோதர பாவமின்றி போர்புரிந்து வந்திருப்பது விசனிக்கத்தக்க காரியம். ஆயினும் இவர்களனைவரும் 1908-ஆம் லண்டன் மாநகரில் கூடிய (The Universal Rec Congress) என்ற பொதுக் கூட்டத்தில் அன்புடன்கூடி நிறபேதங்களைப் பெரிதாய்ப் பாராட்டாது அவர்கள் யாவர்க்குமுள்ள ஒற்றுமையை பாராட்டவேண்டுமென்று செய்த தீர்மானங்கள் வருங்கால நாகரீகத்தின் மேலான அறிகுறியாகும்.

***

இவ்வண்ணமே அன்பின்வழிச் செல்வார் யாவரும் மேனாட்டு நாகரீகம் கீழ்நாட்டு நாகரீகம் என்ற இரண்டு நாகரீகங்களும் உலகின் அபிவிருத்திக்கு வேண்டற்பாலனவென்றே கருதுவர். இவற்றை மனிதவர்க்கத்தின் இரண்டு நேத்திரங்களெனலாம். ஓர் நாகரீகம் ஸ்தூலப் பிரபஞ்ச விசாரணையில் ஈடுபட்டு நிற்பது மற்றொன்று சூக்ஷ்மப் பிரபஞ்ச விசாரணையில் ஈடுபட்டு நிற்பது. நாம் தற்காலத்தில் வேண்டுவதோ, இவ்விரண்டும் அன்புடன்கலந்து மானிடசமூகத்தின் முன்னேற்றத்திற்கு உபயோகப்படும் கருவிகளாதல் வேண்டும் என்பதே. சுருங்கக் கூறின், தற்கால நாகரிகத்தில் பலவிதம் பயங்கரமாண குறைவுகளிருப்பினும் இவையொருவாறு நீங்குவதற்கேற்ற பல குறிகளை நாம் தற்போது காணலாகும். காலம் என்ற பெருஞ்சக்கரம் உலகின் கண்ணுள்ள த்வேஷபுத்தியையும் அவசிய மற்ற பேதங்களையும் அறுத்தெறிகின்றது. அதன் மகிமையால் ஒற்றுமையைப் பலப்படுத்தும் சக்திகள் பலவும் பெருகி வருகின்றன. (கலி) யென்ற சச்சரவுகாலம் ஓரளவு நீங்கி அன்பு சகோதர தத்துவம் ஒற்றுமையென்ற தத்வங்கள் பிரபலமடையும் காலம் சமீபித்து விட்டது.

***

ஆதலால் இத்தருவாயில் நமது கடமை யென்னவென்று ஆலோசிப்பது அவசியமாகும். அக்கடமையோ நமது தீவிரமான நல்லெண்ணங்களாலும் நன்முயற்சிகளாலும் அக்காலத்தின் வருகையைத் துரிதப் படுத்துவதேயாம்.

ஆர். பஞ்சாபகேசன்.

மாதுஸ்ரீ அன்னை பெஸாண்டு
யெனும் வஸந்த அம்மை
அவர்கள் தோத்திரம்.

விருத்தம்.

செம்மையாம் பிரஹ்மஞானஞ் ஜகதலந் தனிலேவோங்கி
இம்மையே வொற்றுமைப்பட் டிந்நுவா சும்மனோர்கள்
வெம்மையாம் பேதநீக்கி வித்தக மருள் வஸந்த
அம்மையி னுபயபாத மனுதின வணக்கஞ் செய்வாம்.

ஆனந்தக் களிப்பு.

இராகம் - நாதநாமக்கிரியை - தாளம் - சாப்பு.

பல்லவி.

1. பிரஹ்மஞான சங்கங் கூடு—மன
   பேதாபேத மகற்றும் வழி நாடு. (பிர)

அநுபல்லவி.

2. நிர்மல வாழ்வையுண் டாக்கும்—வேத
   நீதியுணர்ந்த நேயரொடு சேர்க்கும்
   கர்மவினையாவும் போக்கும்—ஜீவ
   காருண்ய யோகங்கருதவே தாக்கும் (பிர)

3. ஆஸ்திக மார்க்கமே ஓங்கும்—புவி
   அறுசம யநெறி யறியாமலேங்கும்

நாஸ்திக வாதம்பின் வாங்கும்—மோன
நாட்டத்தி னர்களை நாடியே தாங்கும். (பிர)

4. ஸத்திய விரதத்தைச் சாற்றும்—யாருமோர்
தன்மை யாகவே யிருக்கவே தூற்றும்
தத்துவா தீதத்தைப் போற்றும்—வீண்
தர்க்கங்க ளெல்லாங்க ணத்திலே மாற்றும் (பிர)

5. ஒருகுல மொரு தெய்வ மென்றே—ஆய்ந்தே
யுரைத்தபெ ரியோர்க ருத்தின் பானின்றே
சருவகா ரணனையே வின்றே—தொழு
சைதன்ய யோக தவமுறு நன்றே. (பிர)

6. பொன்னென்றே யணிபல பேதம்—கண்டு
பூதல த்திற்சிவ விஷ்ணுவின் வாதம்
என்னென்று சொல்லற் பிரமாதம்—இதை
வெளிதினு ணர்த்து நயமிந்திய வேதம். (பிர)

7. நானெனு மகந்தை கொள்ளாதே—திரு
ஞானநெறி யறியாது துள்ளாதே
தானந் தருமந் தள்ளாதே—வேத
தத்துவ யோகரைத் தாழ்மை யிள்ளாதே. (பிர)

8. பாப வாழ்வு மனை யெண்டு—உயிர்
மாய்ந்த போது வருவாரோ திரண்டு
தூயயாதனு தேகங் கொண்டு—உன்னைத்
தொடர்வாரே யெமபடர் துணையெவ ருண்டு (பிர)

9. தாகம் வந்தபின் சென்று—குளந்
தன்னை வெட்டுவது சரியலவின்று
யோக நிலையினில் நின்று—கண்டால்
ஓங்கார ரூபமு ணர்ந்திடு நன்று. (பிர)

10. சாதி சமயம் தடுக்கும்—சர்வ
சமயமு மொன்றெனத் தான்வந் தடுக்கும்
கோதி லறிவைக் கொடுக்கும்—அண்ட
கோளக மத்தியில் குலவ விடுக்கும் (பிர)

11. திராவிட வைணவ சைவர்—பின்னுஞ்
செப்புங்கி றிஸ்தவ ரொடுமகம் மதியர்
பராவு நால் வருணத் தவரு—மொன்றாய்ப்
பண்பாயிருந்து பரவிடுந் தூய (பிர)

12. வடகலை தென்கலை யிரண்டே—என்று
வாதமிட்டே வாடுகின்றார் மருண்டே
திடராஜ யோகரைக் கண்டே—சூட்சி
தெரிந்து கொள்ளலாஞ் சிந்தைமகிழ்
கொண்டே (பிர)

13. பஞ்சமர் நஞ்சகோ தரரே—சேர்ந்து
பட்சமாய்ப் பாராட்டி னல்வருஞ் சீரே
அஞ்சும்படி வைத்தால் நேரே—கடவுள்
துணைபுரி யாரினிச் சொல்வதைப்பாரே (பிர)

14. அன்னை வஸந்தை யென்பாரும்—சங்கம்
அதிபதியாக அமர்ந்தனர் சீரும்
மன்னிய மாதவர் தேரும்—படி
மாசிலாத வொருநிலை தனைச்சாரும் (பிர)

15. உண்மை ஞான தவர் தேடும்—வழி
ஒன்று மறியா துள மிக வாடும்
பெண்மணி மாதரும் நாடும்—படி
பிரியமாகவே யமைத்துக் கொண்டாடும் (பிர)

16. மோகாந்த வல்லலை யோட்டும்—காசி
முனைசுழிதனில் நின்றால் முடிவினைக்காட்டும்

ஏகாந்த நிலையினைக் கூட்டும்—கண்டும்
எத்து வோருக்கு சாந்தயதைக் காட்டும் (பி)

சுபம்.

17\. கச்சி மாநகரில் வாசன்—சங்கக்
கருணை மிகு வஸந்தம்மையின் தாசன்
மெச்சுராமன் தம்பி நேசன்—கேட்க
விளம்பினான் மதுரகவி நடராசன் (பிர)

வாழி

கலிவிருத்தம்.

வாழி காஞ்சிமா நகர்வாழியே
வாழி பிரஹ்மஞான சங்கம் வாழியே
வாழி யங்கத்தினர்களும் வாழியே
வாழி போகவைபோகமாய் வாழியே.

சுபம்.

இது சோழமண்டலம் உறையூர் வாணீபீடம் ஸ்ரீமத் முத்துவீரமா முனிவரென்னும் மகா வித்துவான் முத்து வீர வுபாத்தியாயரவர்கள் பரம்பரை தமிழ் வித்வான் மதுரகவி பு. நடராஜ வுபாத்தியாயரவர்களா லியற்றப் பட்டது.

அதீந்திரியத்தின் உண்மை

II-பாகம்.

தோற்றத்துக்கும், உண்மைக்குமுள்ள வித்யாசத்தைக் காட்டத் தக்க உதாரணம் இன்னொன்றுண்டு. 'நக்ஷத்ர மண்டலக் கொடி' என்றால், கொடித்துணியில் நக்ஷத்ரங்கள் வந்திருக்கின்றன என்று அர்த்தம்? அல்ல. அமெரிக்கா தேசப் பெருமையும், மனிதர் சாமர்த்தியத்தையும் கொடி ரூபமாய் நிதர்சிக்கவே, அக்கொடி ஏற்பட்டது. இதுதான் உண்மையான கருத்து.

நமது கண் முதலான இந்திரியங்கள் யாவை? அவைகள் நமக்கு முக்கிய சாதனங்கள். சாஸ்திர பரிச்சயத்துக்காக அவைகள் ஏற்பட்டவையல்ல. உணவு சம்பாதிக்கவும், எதிரிகளிடமிருந்து தப்பிவிக்கவும் அவைகள் ஏற்பட்டவை.

தந்தியடித்தால் ஸமாசாரம், தந்திக்கம்பியிலா இருக்கிறது? முதன் முதலில் அடிப்பவன் மனதிலும், பிறகு கேட்பவன் மனதிலுமிருக்கும். மூளையைப் பார்த்தால், அதன் ரஹஸ்யத்தை அறிந்துவிடலாமென்று சிலர் எண்ணினார்கள். ஸூக்ஷ்மதர்சிக் கண்ணாடியால் பார்த்தால், பாண்டு வாத்யாருடைய பிரம்பு ஆட்டத்துக்கும் மூளைக்கும் சம்பந்தமேயில்லை.

நான் கலைகளைப்பற்றியே கூறக்காரணமென்ன? கலைகள் யாவும் கல்பனைகளே.

ஹாம்லட் நாடகமாவது யாது? அது ஒரு கவியின் கல்பனை! கலைகள் யாவும் முதன் முதல் மனதில் ஸூக்ஷ்ம உருக்கொண்டு, பிறகு கலைஞன் திறமையால் ஸ்தூல உருக் கொள்ளுகின்றன, கவி எழுதிய கடிதத்தைப் பார்த்தால்

பென்ஸில் கோடுகள்தான் தோன்றும். உண்மையில், அது கவியின் உள்ளத்திலுள்ளதைப் பிரத்யக்ஷமாக்கத் தக்க சாதனமாய் விளங்கும்.

இதே மாதிரி, ஈசுவர ஸ்ருஷ்டி தத்வத்தையும் ஊஹிக்கலாம். ப்ரக்ருதி தத்வங்கள்யாவும் சில விதிகளுக்கும், ஒழுங்குக்கும் உட்பட்டே நடக்கின்றன. சூரியனைச் சுற்றி வரும் க்ரஹங்களின் ஒழுங்கைப்போலவே, ப்ரபஞ்சத்திலுள்ள பரமாணுக்களும் சில விதிகளுக்கு கட்டுப்பட்டே சஞ்சரிக்கின்றன.

மாலை வர்ணனையில் ஸ்தூலமாய்ப் பார்த்தால் ஒன்றுமில்லைத்தான். அதன் நிஜ அழகைக் கவனித்தால், அதைப்படைத்த ஈசனது மனோபாவமும், மஹிமையும் நன்கு விளங்கும். கவியின் மனோபாவம், அவனது செய்யுளால் விளங்குமல்லவா? ஒவ்வொரு வஸ்துவையும் ஈசன் மனதில் ஸ்ருஷ்டித்த பிறகுதான், ஸ்தூலமாய் ஸ்ருஷ்டிக்கின்றார். அற்பப் பொருளும் அவனது மஹிமையையே விளக்கும்.

இதைப்பற்றி டென்னிஸன் என்ற ஆங்கிலக் கவி அடியில் வருமாறு வர்ணிக்கின்றார்:—

“சுவரில் பூத்த மலரே! உன்னை வேரோடு பிடுங்கி என் கையிலணிந்திருக்கின்றேன். பார்க்க அற்பமாய்த் தோன்றுகின்றாய். ஆனால், உன் ரஹஸ்யத்தை யறிந்தால் ஈசனது பெருமையும், மனிதன் சிறுமையும் தன்படியே விளங்கும்”.

நம்மைக்காட்டிலும், மிருகங்களின் இந்திரியங்கள் தீக்ஷணமானவை. பாட்டுக்கச்சேரிக்கு நாயை அழைத்துச்சென்றால், அது ஊளையிடும். சித்ரசாலையில் நாய்க்கு என்ன பிடித்தமிருக்கும்? நாம் பார்ப்பது போலவே பார்க்கத் தக்க கண்கள் நாய்க்கும் இருக்கின்றன, இருந்து

என்ன பயன்? படத்தின் தத்வம் பார்வையில் மாத்திரம் அல்ல. பார்ப்பவன் மனத்தில் உதிக்கின்றது. முதல் முதல் சித்திரக்காரன் உள்ளத்திலுதித்தது. அவன் அதை சித்ர மூலமாய் வரைந்தான். அப்படி வரையப் பட்ட படம், இப்போது பார்ப்பவன் உள்ளத்திலும், ஆதியில் சித்திரக்காரன் மனதில் தோன்றிய அதே உருவத்தையும் எண்ணங்களையும், மனோபாவங்களையும் உண்டாக்குகின்றது. பாட்டுக் கச்சேரியில், உன் மனதிலுள்ளதையே கேட்கின்றாய். பாட்டுக்குக் காரணம் மனதே யொழிய வாயு கம்பனம் (Vibration) அல்ல.

நமது சரீர தர்மத்தைக் கொண்டே பிறர் தன்மைகளையும் ஊஹிக்கின்றோம். 'மனித தத்வம்' என்பது என்ன? மனம்', 'எண்ணம்' என்று சொல்லும்போது 'மூளை' என்று எண்ணவே கூடாது. மூளையென்றால் என்ன? ஒரு வெண்மையான பிண்டம். துண்டு துண்டாய் அதை வெட்டலாம்! நினைவும் 'ஸ்மரணையும்' மூளையிலல்ல. மனோ விகாரங்களின் உற்பத்தி ஸ்தானத்தைப்பற்றி, மனதுக்குத் தோன்றியவாறு பலர் பலவாறு கூறுகின்றனர். சிலர் ஹிருதயம் என்றும் சிலர் மூளை என்றும் கூறுகிறார்கள். மனதுக்கிருப்பிடம் சரீரமேயல்ல. பாட்டு வீணையிலிருக்கின்றதா, மனிதனது மனதில் இருக்கின்றதா? அது போலவே, எண்ணமும் மனதில் தோன்றுகின்றதே யொழிய மூளையிலல்ல. 'வீணையானது பாட்டுக்கு ஓர் உபகரணம் போல, 'மூளை மனதின் உபகரணம்.

மூளை என்ற கரணத்தைக் கொண்டுதான், மனம் சரீர தர்மத்தை நடத்துகின்றது. கையை அசைக்க வேண்டுமென்று விரும்பினால் உடனே அசைத்து விடுகிறேன்: எப்படி முடிகிறது என்பது மாத்திரம் எனக்குத் தெரியாது. அசைக்க நினைத்தால் அசைந்து விடுமென்பது மாத்திரம் அனுபவ ப்ரமாணம், காரிய கரண சம்பந்தமின்னதென்றறியாமலே வழக்கமாய்ச் செய்துவருகிறோம்!

அதாவது, இவ்வர்ணனை சமயத்தில், இப்பிரபஞ்ச ஏக பாவமே, கவியின் மனதில் உதயமாயிருக்கவேண்டும். இதேமாதிரிதான் பௌதிக சாஸ்த்ரஞ்ஞான. டார்வின் வர்க்கஸ்ருஷ்டி, (Origin of Species) என்ற நூலை இயற்று முன், மலர் முதல், சராசரங்கள் யாவையும் ஒன்றாகவே பாராட்டி மனதில் பரிசிலனை செய்வாராம். பூச்செடி முன் மணிக்கணக்காய் நின்று அதன் தத்வ பரி சீலனை செய்வார். அதனருமையை அறியமுடியாத வேலைக் காரன் டார்வின் நிலைமையைக்கண்டு பரிதபித்து "ஐயோ பாவம். கிழம்! நாழிகைக்கணக்காய் நிற்கின்றதே! வேறு வேலையில்லையா!" என்று மற்ற வேலைக்காரரிடம் சொல்லு வானாம்.

நமது உலக அறிவானது நம்மனப் பக்குவத்துக்குத் தக்கவாறு அமைகின்றதே யொழிய, இந்திரியங்களாலல்ல. எங்கு நோக்கினும், ஈசன் பெருமையே விளங்கும். இது வரை சாஸ்த்ரபரிசய ஞானத்தைப் பற்றிக்கூறினோம். அதே மாதிரி தான் சரீரஞானமும். சரீரம் ப்ரத்யக்ஷம். சரீரி (சரீரத்தை அந்தர்யாமியாயிருந்து ஆளும் ஆத்மா) யோ அப்ரத்யக்ஷம். மனதுக்கும், ஜடப்ரக்ருதிக்கும் மத்யஸ்த மானது, மூளை. மனம், ஜடம் இவைகளின் சம்பந்தம் எப்படிப்பட்டதென்று நாமறியோம். பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியால் சிறிதளவறியலாம். ஆனால் முற்றிலுமறிய முடியாது.

சங்கல்ப (Will) த்தால் சரீரமுண்டாகிறது. அதில் சுமார் 70 ஆண்டுவரை, ஆத்மா வசித்து, அடக்கியாண்டு, பிறகு அதைக்காலி செய்து விடுகின்றது. சரீரம் கேவலம் கரணமே யொழியக் காரணமல்ல. வீணையை ஒடித்து விட் டால் ஸங்கீதம் போய்விடுமா? சரீரத்தை வதைத்தால், ஆன்மா நசிக்குமா? ஒரு வீணை போனால் இன்னொரு வீணை செய்து கொள்ளலாம். அதுபோல, இந்த ஸ்தூல சரீரம், போனால் ஸூக்ஷ்மசரீரம் தன்படியே வரும்!

ஸூக்ஷும சரீரம் உண்டென்றால் அது நமது ஸ்தூல இந்திரியங்களுக்குப் புலப்படமாட்டாது. இம்மையில் நமக்கிருப்பது ஸ்தூலசரீரம். மறுமையில் வருவது ஸூக்ஷ்ம சரீரம். அதுவும் நன்மையான சரீரந்தான. உபயோகமு முள்ளது.

இவ்வுலகில் லௌகிகமான காரியங்கள் பல செய்ய வேண்டியிருக்கின்றன. நண்பரைத்தேடிக்கொள்வது நமது முக்கிய கடமை. அன்பும் அபிமானமுமே நமது இல்வாழ்வை நல்வாழ்வாக்கத் தக்க சாதனங்களிலொன்று. இதுவரை நாம் அறியாததைப் புதிதாய் அறிந்துக் கொள்ளத் தக்க இந்திரியங்கள் வாய்ந்த நமது சரீரமே, நமது ஞான விருத்திக்குத் தக்க சாதனம். இம்மையில ஈசுவர அபிமானத்துடன் வாழ்ந்தவர்களே, மறுமையிலும் அவ்வாறு ஒத்து வாழத்தக்கவர்கள். ஆத்மலாபமே பெரிதெனக்கருதி இம்மையில் வாழ்ந்தவர்க்கு, மறுமையில் தக்க நண்பர் கிடைப்பதே அரிதாய் முடியும்.

நமது ஞாபகமும், குணமும் சரீரத்துள்ளடங்கியவையல்ல. இச்சரீரத்தை விட்டகன்று பரலோகம் சொல்லுகையில் அவைகளும் நம்கூட வருகின்றன. அவைகள் நமது இணைபிரியா ஸஹகாமிகள் சில சமயங்களில் நினைத்தால் பயமாய்த்தானிருக்கும்.

நாம் செய்வன யாவும் ஸஞ்சித கர்மங்கள். அதை அனுபவியாமல் தீராது. 'தன்னறிவு' இதைக்காட்டிலும் சங்கடமானது ஏதோ கூடியவரை இல்வாழ்வை நல்வாழ்வாய்க் கழிப்பதே உத்தமம். எப்படியும், நமக்கு அழிவே கிடையாது.

பரகதி யடைந்தவர் நம்மைப்பிரிந்து விட்டனர் என்பதல்ல. நம்மைப்போல அவர்களுக்கும் ஜீவன்களிருக்கின்றன; இம்மையிலிருப்பவர் மறுமைக்குச்சென்றவர்

ஆகிய இருதாரப்பினரும், ஓரே குடும்பஸ்தர். ரணகளத்தில் மாண்டவரின் பிரிவாற்ருமையால் வருந்துகிறவர் இதை நன்கு கவனிக்கவேண்டும். இம்மையில் தம்மைப் பிரிந்தனராயினும் மறுமையில் நித்யானந்த சுகத்தை யனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

'அம்பரம்' என்பது ஸத் அல்ல வெட்டவெளித்தோற்றம் சுவர்க்கத்துக்கும் நமக்கும் நடுவே தடங்கல் கிடையாது. ஆனால் சுவர்க்க நரகங்களுக்கும் நடுவே தடங்கல்உண்டு. (River between heaven and earth) வைதரணியைக் கடக்க பக்தியே பாலமாய் உதவும், இதைப்பற்றி ப்ளோடா, என்ற கவியானவர் பக்தி அன்பு எனும் வியாசத்தில் அழகாய் வர்ணித்திருக்கிறார்.

கொடும்போரால் குடும்பம் உலைவலாகாது! வாலிபர், அற்பாயுளாய்ப் போவது துக்கந்தான். ஆனால் அவர்கள் நல்விஷயத்தில் உயிர்துறக்கின்றார்கள். அவர்கள் பாடு சௌக்யந்தான். அவர்களைப்பிரிந்து இன்னும் உயிர்த்திருப்போர் பாடுதான் கஷ்டம், நமக்கு முன் சென்றவராயினும் உண்மையில் நம்மைப்பிரிந்தவரல்ல. நமதருகிலேயே இருக்கின்றனர்.

"புரியவேயில்லையா! அப்படியானால் அவர்களை யேன் பார்க்கமுடியவில்லை? அவர்கள் சந்தோஷத்தைக் கண்டு நாமும் ஏன் களிக்கலாகாது?"

அப்படித் தெரியாமலிருப்பதே நலம்! எப்போதும் மெய்ப்பொருள் ப்ரத்யக்ஷமாய்த்தோன்றின், நாமும் ப்ரமித்துவிடுவோம். இறந்தவர் (யாவரும்) ஈசன்பதம் சேருகிறார்களென, சில வேளைகளில் எண்ணுகிறோம். சிலசமையங்களில் அவ்வெண்ணம் சித்தப்ரமைக்குக்காரணமாய் முடிகின்றது. மத்யகால க்றிஸ்தவ மடாதிபர்கள் சுவர்க்கம் நரகம் என்ற இரண்டை மாத்திரமே மனிதர்

உள்ளத்தில் புகட்டி வந்தார்கள். (மந்திரில் ஒன்றுமில்லை என்றார்கள்) அது ஒரு பெருந்தவறு ஆனால் இப்போது அப்படி நினைப்பவர் ஒருவருமில்லை. அது உண்மையுமல்ல. மஹான்கள் பரமபதமே அடையலாம, என்போன்ற மற்றச் சிறுவர்க்கு இவ்விரண்டைத்தவிர வேறு வழியில்லை யா? நம்முடைய நிலையோ அந்தரமானது. தத்வம் நமக்கு நேரே விளங்காமல் மறைபட்டிருக்கின்றது. சில சமையங்களில் மின்னல் போலத்தோன்றி மறைகின்றது.

ஸூக்ஷ்ம ப்ரபஞ்சம் உண்டென்னும் கொள்கையே சகல மதங்களுக்கும் ஆதாரம். மஹான்கள் பிதருக்களை ப்ரத்யக்ஷமாய்க் காண்பது உண்மையான விஷயம். அவர்களும் நாமும் ஈசுவரனுக்கு லீலாபாத்திரர்கள். ஆங்கிலராகிய நாம் இவ்வுலகில் செய்யவேண்டிய கடமைகள் பல வுண்டு. செய்யச்செய்ய மேன்மேலும் பல ஆணைகள் வந்து கொண்டேயிருக்கும். நமது பொறுப்பிலனேக மிருக்கின்றன. அதைப் பற்றிப் பின்பு விவரிப்போம். தேவதூதர்கள் நமது அருகிலேயே இருக்கின்றனர். அதை மஹான்களறிவார்கள். சில சமையங்களில் தாமே நமக்குந் தோன்றுவார்கள். அவர்களை நம்மால் தேடிச் சாத்தியமில்லை. இது தக்க சமயம். தக்க முயற்சி செய்யவேண்டும். போனதைப்பற்றி வருந்துவதைக் காட்டிலும், இனி மேலாவது சந்தோஷ மாயிருக்க வழிதேடவேண்டும்.

மறுமையைப் பற்றிப்பேசுகிறோம். மறுமை யொன்றுண்டு என்பதே எனக்குத் தெரியாது. இம்மையும் மறுமையும் ஒன்றுதான். ஆனல், ஒன்றின் இரண்டு தோற்றங்கள்! ஒன்றே ப்ரபஞ்சம்! ஒன்றே குடும்பம். சரீரம் முதலான ஸ்தூல உபாதி (limitation) களுக்குட் பட்டிருக்கிறோம். மற்றது ஸூக்ஷ்ம ப்ரபஞ்சம். நமது ஞானக்குறைவால் இரு அம்சங்களையும் ஒருமிக்கப் பார்க்க இயலாதவரா யிருக்கின்றோம்.

இவ்வாறு ப்ரபஞ்சத்தைப்பற்றிய விசாரணை மத்தியில் 'பரமாத்மா' நினைவும் வருகின்றது. அப்பரம தத்வம் வாக்குக்கும் மனதுக்கும் எட்டாத மெய்ப்பொருள். அவர் எங்கும் இருக்கின்றார். இதை யறிவதே பேரறிவு.

ஸர் ஆலிவர் லாட்ஜு.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், பி. ஏ. பி. எல்.

அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது.

கீதை.

மதுரையில் 13—8—21-ல் செய்த உபந்யாசக் குறிப்பிலிருந்து எழுதப்பட்டது.

கீதை என்றால் பாட்டு என்று பொருள்படும். பகவத் கீதையில் 700 சுலோகங்கள் உள்ளன. சென்ற 1100 வருஷங்களாக அதாவது காலடியிற் பிறந்த சங்கரர் காலமுதல் இந்த 700 சுலோகங்கள் மாறாமல் இப்போதிருப்பது போலவே, இருக்கின்றனவென்று திண்ணமாய் நாம் கொள்ளலாம். இப்பகவத்கீதை ஹிந்துக்களுக்கு முக்கியமான கிரந்தம் என்பதை ஒருவரும் ஆட்சேபிக்க முடியாது. எல்லா மதஸ்தர்களும் இதற்கு வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். ஹிந்து மதத்திற்கு மூன்று கால்கள் உண்டு. அவை உபநிஷத்துக்கள், பிரஹ்மசூத்திரம், பகவத்கீதை என்று கூறலாம்.

ஆனால் நான் மாணாக்கனாகவிருந்த காலத்தில் கீதையென்று ஒன்று உளதென்றே அநேகருக்குத் தெரியாது. ஏனென்றால் அதைப் படிப்பதற்கு ஒரு குருவினிடத்தில் உபதேசம் பெற்ற பிறகு தான் துவக்கவேண்டு

மென்று சொல்வதுண்டு. அன்றியும் அது சம்ஸ்கிரத பாஷையில் ஏற்பட்டிருப்பதினால் அநேகர் அதைப்படிக்கக் கூடவில்லை. சிலகாலத்திற்குமுன் இந்த கீதை ஆங்கில பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டது. அதனால் அநேக ருக்கு இப்படி யொரு கீதை யுண்டென்று தெரியவந்தது. நான் கீதையைப் படிப்பதற்கு உபதேசம் ஒன்றும் பெறவில்லை. இன்னார்தான் கீதையைப் படிக்கலாம் இன்னார் படிக்கக்கூடாதென்ற வரம்பு உள்ளதென்று நான் நம்ப வில்லை. இக்கீதை அனைவருக்காகவும் ஏற்பட்டதென்றே நான் நினைக்கிறேன்.

இக்கீதையைச் செய்தவர் வியாசர் ஐந்தாம் வேத மாகிய மகாபாரதத்தில் பீஷ்மபர்வத்தில் பிரஹ்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களாகிய அனைவர்க்கும் உபயோமாக வேண்டுமென்றே இதை அவ்வியாசர் அருளிச் செய்தார் என்பதற்கு ஐயமில்லை.

கிருஷ்ணபரமாத்மா கீதையை இவ்வெழுநூறு சுலோகங்களாவே அருச்சுனனுக்குச் சொன்னார் என்று நான் நினைக்கவில்லை. உண்மையான உபதேசமானது எப்போதும் எப்படிச் செய்யப்படுகிறதோ அப்படியே அவருடைய ஹிருதயத்திலிருந்து அருச்சுனனுடைய ஹிருதயத்திற்குத் தெரியப் படுத்தி யிருக்கவேண்டும்.

சஞ்ஜயருக்கு தூரத்திலேயே பார்க்கவும் கேட்கவும் கூடிய சக்தியை வியாசர் அருளிச்செய்து திருதராஷ்டிர னுக்குச் சொல்லும்படி செய்திருக்கவேண்டும்.

வியாசர் இக்கீதையைப் பிறகு ஸூதர் என்ற பிரதி லோம ஜாதியிற் பிறந்த ரோமஹர்ஷணருக்கு உபதேசி த்தார். அவரிடமிருந்தும் பிறகு அவருடைய புத்திரர் உக்கிரஹர்ஷணரிடமிருந்தும் மற்ற ரிஷிகள் நைமிசாரண்ய த்தில் உபதேசம் பெற்றார்கள்.

ஒன்பதாவது அத்தியாயத்தில் பகவான் எல்லோரும் என்னைத் தொழலாம் என்று கூறுகிறார். பகவத்கீதையை பக்தியற்றவனுக்கும் என்னைப் பழிப்பவனுக்கும் சொல்ல வேண்டாம் என்றும் சொல்லியிருக்கிறார். ஆனால் இந்த ஜாதியில் பிறந்தவனுக்குச் சொல்லவேண்டாம் என்று சொல்லவேயில்லை.

ஹிந்துக்கள் தாங்கள் மிகவும் மேன்மையான மதஸ்தர்கள் என்று பாராட்டிக் கொள்ளுகிறார்கள். ஆனால் கீதையை மட்டிலுமாவது அறியாமலிருப்பதைக் காட்டிலும் கபடத்தனம் வேறொன்றுமில்லை. ஹிந்து என்றால் யார் என்று கேட்போமேயானால் அதற்குச் சரியான விடை கொடுப்பது மிகவும் கஷ்டம். என் மனதிற்கு ஹிந்து மதஸ்தன் என்பவன் கீதையையாவது பாராயணம் செய்திருக்கவேண்டும் என்று படுகிறது.

கீதையைப் படிப்பதற்கு வியாக்கியானங்கள் ஒன்றும் வேண்டியதில்லை. கீதையையே திருப்பித் திருப்பிப் படித்துதானாகவே அதின் மொத்த அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும். பிறகு வியாக்கியானங்களைப் பார்க்கலாம். ஏனென்றால் சமரஸ புத்தியுடனிருப்பவர்கள் மிகவும் துர்லபம். வியாக்கியானம் செய்தவர்களெல்லாம் தங்கள் தங்கள் மனோபாவனைக்கும், மதாசாரக் கொள்கைகளுக்கு மிணங்க அர்த்தம் செய்திருக்கிறார்கள். சங்கருடைய சிஷ்யர்களே ஒருவருக்கொருவர் வித்தியாசப்பட்டிருக்கிறார்களென்பது நமக்குத் தெரிந்த விஷயம்.

ஆகையால் தன் சொந்த அறிவைக்கொண்டே அவனவன் அறிந்து கொள்வது தான் சிலாக்கியமானது. ஒருசார்பினரா யிருக்கக் கூடாது. பெரிய வியாக்கியானம் செய்தவர்களெல்லாம் ஒருவர்க்கொருவர் வித்தியாசப் படுகிறதினால் நமக்குப் பெரும் மனகுழப்ப முண்டாய்விடும். வார்த்தைகளைப் பிரட்டித் தனக்கு இஷ்டப்படி அர்த்தப்

படும் பொருட்டு என் வியாக்கியானங்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நினைக்க வெகு ஆச்சரியமாயிருக்கிறது. பகவானே ஓரிடத்தில் பின் வருமாறு சொல்லுகிறார். "நான் சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லியாய் விட்டது. எல்லாவற்றையும் யோசித்து நீயே ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும்."

கீதை முழுவதும் யோக சாஸ்திரம் என்று கருதுகிறேன். யோகம் தான் பெரிது என்று பகவான் சொல்லுகிறார். ஞானயோகம் கர்மயோகம் என்று இரண்டு யோகங்களுண்டு. யோகம் என்றால் சேருதல் என்று பொருள். ஈசுவரனிடமிருந்து நாம் வந்தோம். அவனிடத்தே சேருவது தான் யோகம். ஆங்கிலத்தில் Religion என்றாலும் அதே பொருள் தான் படும். மனதையும் பக்தியையும் எவனொருவன் என்னிடத்தில் வைத்திருக்கிறானோ அவன் தான் பரமயோகி என்று பகவான் கூறுகிறார். ஞான யோகமானது சாங்கியர்களுக்கேற்பட்டது. பக்தி கர்மயோகங்கள் பிறருக்கேற்பட்டது. இரண்டு வழிகளும் ஒரே முடிவுக்குத் தான் கொண்டு செலுத்துகின்றன. ஜனங்களில் ஒரு சாரார் மிகக் கூர்மையான புத்தியோடு சுய நம்பிக்கையுடையவர்களாயிருக்கிறார்கள். மறு சாரார் சாதாரண புத்தியுடையவர்களாயிருக்கிறார்கள். ஞானயோகம் முதற் கூறியவர்களுக்கும், கர்மயோகம் பிற்கூறியவர்களுக்கு மேற்பட்டது. இவ்விரண்டு யோகங்களில் கர்மயோகந்தான் விசேஷித்ததென்று பகவான் கிருஷ்ணனே சொல்லியிருக்கிறார். பிரகிருதி, புருஷ, காலங்களோடு மூவகைக்குணங்களும் சேர்ந்து மாறுபட்டிருக்கும் ஜகத்து நான் தான். ஆகையால் இவைகளாகிய சர்வ பூதங்களில் எவனொருவன் வேலை செய்கிறானோ அவன் தான் என்னை அடைகிறான். என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறான்.

பகவானுடைய வேலையை யாரொருவன் எடுத்துக் கொள்கிறானோ அவனே அவரை அடைய முடியும் என்பது தான் கீதையின் தாத்பரியம். கீதையினுடைய எல்லா தத்வங்களும் ஒன்பதாவது அத்தியாயத்தில் அடங்கியிருக்கின்றன. அதைமட்டிலுமாவது படித்தாலும் போது மென்று சொல்லுவேன்.

மிகப் பரிசுத்தமும், உண்மையை அறியும் சக்தியும் ஒன்பதாவது அத்தியாயத்தைப் படிப்பதினால் ஏற்படு மென்பதில் ஐயமில்லை.

ஒன்பதாவது அத்தியாயத்தின் முடிவில் எல்லா வற்றையும் என்னிடத்தில் ஒப்புவித்து விடுங்கள் என்று பகவான் சொல்லியிருக்கிறபடி சகல காரியங்களை யும் செய்யும் பொழுது அவருக்கென்றே செய்யும் படிக்கு நான் எல்லோரையும் கேட்டுக்கொள்கிறேன்.

டி. எஸ். சதாசிவையர்.

எம். எஸ். சுந்தர சர்மா

மொழிபெயர்த்தவர்.

பிரமாணங்கள்.

14—8—21ல் மதுரையில் செய்த

உபந்யாஸத்தின் சுருக்கம்

பிரமாணம் என்றால் அளக்கும் கருவி என்று பொருள் அதாவது உண்மை அல்லது சத்யத்தை அளப்பதற்கு ஏற்பட்டது. ஈசுவரன் தான் சத்யம். மனிதனுக்கு சத்ய த்தைக்கண்டு பிடிப்பதைக் காட்டிலும் வேறு முக்கியமான கடமை கிடையாது. சத்தியத்தை மிஞ்சிய தர்மம் வேறு ஒன்றும் இல்லை.

சத்தியத்தை அறிவதற்கு நான்கு பிரமாணங்களுள்ளன;— அவையாவன.

1. பிரத்தியக்ஷம்
2. அனுமானம்
3. சப்தம்
4. ஆத்மஸம்வித்.

எது ஐம்புலன்களுக்கு மாத்திரம் புலன் படுகிறதோ அது தான் முதலாவது சொன்ன பிரத்தியக்ஷம் என்பது. ஐம்பொறிகளைக்கொண்டு புலப்படுவதினாலும் இவ்வைம் புலன்களை நம்பக்கூடாததாகையினாலும் பிரத்தியக்ஷப் பிரமாணத்தினால் உண்மையை அறிவது முடியாது. திருஷ்டாந்தமாக சூரியோதயத்தையும் அஸ்தமனத்தையும் கருதுங்கால் பிரத்தியக்ஷமாய் சூரியன் தான் ஒரு திசையிலிருந்து மற்றோர் திசைக்குச் செல்கிறதென்ற உண்மையல்லாத அறிவு ஏற்படுகிறது. ஆகையால் பிரத்தியக்ஷப் பிரமாணம் மட்டும் நம்பக்கூடாததாகின்றது.

ஆகையால் ஐம்புலன்களால் அறிவதோடு கூட நமது புத்தியால் ஆராய்ந்து அறிவது உண்மையை வெளிப்படுத்த உதவுகின்றது. இதற்குத் தான் அனுமானப் பிரமாணமென்று சொல்வது. இது மிருகங்களுக்குச் சிறிதும் மனிதர்களுக்குப் பெரிதும் உண்டு. ஆனால் உண்மையை அறிவதற்கு இவ்விரண்டு பிரமாணங்கள் கூடப் போதாது. ஏனெனில் அனுமானம் ஐம்புலன்களை அனுசரித்திருக்கிறது. புலன்களால் அறியக்கூடியது சிலதுதான். அதாவது புலன்களால் அறியக்கூடாதவைகள் அநேகம் உளவென்று நாம் அறியலாம். நமது சாஸ்திரங்களில் பூமியைத்தவிர அதற்கு மேல் சூக்ஷ்ம லோகங்கள் இருக்கிறனவென்று கூறப்படுகிறது. சூக்ஷ்ம லோகங்களை அறிகின்றவர்கள் தான் ரிஷிகள். சமாதிநிலைமையில் ரிஷிகள் அவ்வுலகங்களைப்

பார்த்துப் பிறகு தம் ஸ்தூல அறிவுக்கு கொண்டு வருகிறார்கள். பிறகு இதரர்களுக்குத் தெரியப்படுத்துகிறார்கள்.

இப்படி ரிஷிகளால் தெரியப்படுத்தி யிருப்பது தான் சப்தப் பிரமாணங்கள் என்று கூறப்படுவது. இதையே ஆப்தவாக்கியம் என்றும் சொல்லுவார்கள். நம்பேரிலுள்ள கருணையினால் அவர்கள் இப்படிச் சொல்லி யிருப்பது தான் வேதங்களும் மற்ற மதஸ்தர்களின் மூலக்கிரந்தங்களும் பிரத்யக்ஷமாய் இல்லாதனவற்றை நாம் அறியும் பொருட்டுச் சொல்லியிருப்பது தான் சப்தப் பிரமாணங்கள்.

உண்மைகளைச் சொல்லியிருந்தால் அவ்வுண்மையானது எப்பாஷையில் சொல்லப்பட்டிருந்தாலும் அது தான் வேதமென்று நான் கொள்ளுவேன். உண்மைகள் தான் முக்கியம் எந்த பாஷையா யிருந்தாலென்ன?

ரிக்வேதம் முதலான வேதங்கள் மிகப்பூர்வீககால முதலுள. நம்வேதங்கள் அனேகமாய் ரிஷிகளால் வெளியிடப்பட்டபடி தானின்றும் இருக்கின்றன. ஆனால் மனிதர்கள் தங்களுடைய சுயநலத்திற்காகச் சில மாறுபாடுகளை இவ்வேதங்களில் செய்திருக்கக்கூடும். ஒரு பதத்தை யெடுத்து வேறொருபதத்தை நுழைத்திருக்கலாம். அன்றியும் புதிது புதிதாய் உபநிஷத்துகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அல்லா உபநிஷத் என்று இப்பொழுது கேள்விபபட்டிருக்கிறீர்கள்.

ஆகையால் எது சப்தப்பிராமணம் என்று அனுமானத்தைக் கொண்டே தீர்மானித்துக் கொள்ளவேண்டும். ஏன் எனில், ரிஷிகளில் ஒரு சிலர் தாங்கள் ஒரு சார்பாயிருந்துபார்த்ததை வெளியிடலாம். மற்றொருவர் வேறு சார்பாயிருந்து பார்த்ததை வெளியிடலாம். ஒருவர் சொல்வதும் மற்றவர் சொல்வதும் முரணாயிருக்கலாம். அல்லது ஒருவர் சரியாய்ப் பார்க்காமலும் சொல்லியிருக்கலாம்.

ஆகையால் எது சரியான சப்தம் என்று அனுமானத்தைக் கொண்டு அறிதல்வேண்டும். ஆத்மஸம்வித் என்ற பிரமாணத்தினால் தான் உண்மையை உண்மையென்று தீர்மானமாய் அறிய வேண்டும்.

ஐம்புலன்களினால் ஏற்படக்கூடிய அறிவைப் போல, சூக்ஷ்மான உண்மைகளை அறியும் புலன்கள் நம்மிடத்தில் குப்தமாயிருக்கின்றன. அப்புலன்களை விழிக்க வைக்கவேண்டும். அப்படி விழிக்க வைப்பதில் நமது சரீரத்திற்குத் தீங்கும் அபாயமும், அஜாக்கிரதையினால் நேரிடக் கூடியதாயுள்ள படியினால் ஜாக்கிரதையுடன், சரியான வழியில் அப்பியாசம் செய்து புலன்களை வெளிவரச் செய்து, சூக்ஷ்மபொருள்களைப் பிரத்தியக்ஷ மாக்கிக்கொள்வது தான் ஆத்ம சம்வித் பிரமாணம். 1வது தீக்ஷையில் புவர்லோக ஞானமும் அம்மாதிரியே 2வது தீக்ஷையில் ஸ்வர்லோக ஞானமும் 3வது தீக்ஷையில் மகர்லோக ஞானமும் 5வது தீக்ஷையில் ஜீவன்முக்தியும் ஆத்ம சாக்ஷாத்காரமும் லபிக்கும் அப்படி ஜீவன்முக்தர் ஆனவர்களால் தான் உண்மையான உண்மை பிரத்தியக்ஷமாய் அறிய முடியும். ஆகவே, இந்நான்கு பிரமாணங்களினால் நாம் சத்தியமாகிய ஈசுவரனை அறிந்து அடையலாம்.

டி. எஸ். சதாசிவையர்.

எம். எஸ். சுந்தர சர்மா
சுருக்கி எழுதியவர்.

பாலிய இந்தியாவின் பரிதாபக் கூக்குரல்.

ஸஹ நௌ யச: ஸஹ நௌ பிரஹ்மவர்ச்சஸம்!!

ஒன்றாக உலக சுகத்தை அடைவோமாக! ஒன்றாக ஞானனுபவ மகிமையை அடைவோமாக— தைத்திரியோ பநிஷத்.

தேசீயக் கல்வி ஒவ்வொரு தேசத்திற்கும் அத்தியாவசியம். இது அந்தந்த தேசத்துப்பூர்வீகப் பழக்கவொழுக்கங்களை அனுசரித்தும், ஜனங்களுடைய குணப்போக்குகளை அனுசரித்தும் நடக்க வேண்டியது நியாயம். இவ்விதம் கல்விப்பயிற்சி சுலபமாய் விருத்தியாவதற்கு அனுகூலமாயிருத்தல் தேசீயக் கல்வியின் உத்தம குணம். ஆகையால் தேசியக் கல்விப்பயிற்சி அபிவிருத்தி யாவதற்குத் தேசத்தவருள் உத்தமர்கள்தானே முன்வந்து முயலல் வேண்டும். அந்நியர்கள் எவ்விதத்திலும் அவ்வளவு அனுகூலமாயிருக்கவே மாட்டார்கள். அனுகூலமாக இருப்பதாகத் தோன்றினும் அவ்வாறு நடிப்பதும் வெறும் தோற்றமே ஆகுமன்றி, உற்றுப்பார்த்தால், உண்மை அங்கு ஒன்றும் இராதென்று நந்நாட்டு உத்தமர்கள் ஊகத்தால் அறிவதன்றி, உள்ள அனுபவத்தாலும் விரைவில் உணர்வர். ஆகையால் நம்நாட்டு உத்தமர்கள் நம்நாட்டு உத்தம உன்னத விருத்தியை உள்ளத்து அமைத்து, அதற்குச் சாதனம் தேசீய கல்வியே என்றுணர்ந்து, நம்மவர்களிடத்து விளக்கவேண்டிய நற்குணங்கள் நாடெங்கும் விகசித்து விருத்தியாகும்படி வேண்டிய ஏற்பாடுகளை ஊக்கத்துடன் இடைவிடாமல் செய்தல் வேண்டும். நம்நாட்டில் ஏற்பட்டிருக்கும் இயற்கை செயற்கை அமைப்புகளுக்கிசைந்து, விருத்திக்கிரமத்தை அனுசரித்து, வேண்டிய மாறுதல்களைத் தன்மயமாக்கிக்கொண்டு வெளியேறி எங்கும் பாவி வேண்டியமட்டும் நம்மவர்களுக்கு உற்சாகம்

ஊட்டிக்கொண்டு உன்னதச் சீர்திருத்தங்களை உண்டாக்கி உதவிபுரிந்து ஊக்கக்குறைவின்றி உண்மையாக நடக்க வேண்டியது இதன் கடமை. சுருக்கமாக இனி தேசியக் கல்விடானது மேல் எடுத்தாளப்பட்ட உபநிஷத்தின் உட்கருத்திற்கு இசைந்து உட்சுபாவவிருத்திக்கு வேண்டிய காரியங்களை ஒருக்காலும் அசட்டைபண்ணாமல் போதுமானமட்டும் பொதுவிஷயத்தில் பொருத்தமாக வெளிக்காரியங்களில் இணங்கி மற்றபடி அசையாது அஞ்சாமல் நடத்தலும் வேண்டும்.

இந்தியாவில் அந்நிய ஆளுகை சென்ற ஆயிரவருஷங்களாகப் பலவிதத்திலும் படிப்பைப் பாழாக்கி அந்நியருடைய விவர்த்தமான விபரீதக்கருத்துகளை மனதில் உணராது கற்று அவர்கள் ஆசாரங்களைப்பழகி அனுசரித்து நடித்து சுதேசிய சுத்தப்படிப்பைத் தள்ளி மறக்கச்செய்து சொந்த சுபாவத்திற்கு விரோதமாக முற்றும் மாறுதலை உண்டுபண்ண முக்கிய காரணமாயிருக்கின்றது. நம்மைப் ப்டிப்பிக்கவந்தவர்கள் போதனாமுறைகளிலும் அதற்கு அவசியமான சாதனங்களிலும் வெளி அனுகூலமான கட்டிடாதிவிஷயங்களிலும் வேண்டியமட்டும் தற்காலவிருத்திக் கிரமத்தைப் பிசகாது அனுசரித்துக்கொண்டிருக்கிறோமென்று போதுமானமட்டும் தங்களையே புகழ்ந்துபேசுகிறார்கள். ஆனால் இந்திய கவிராஜசிங்கமாகிய நம்முடைய ரபிந்திரநாத தாகூரவர்கள் எற்றபடி எடுத்துக்காட்டியதுபோல,, “மானுஷீக உபாத்தியாயர்” மட்டுக்குமிஞ்சி தன்முறையில் மாறுபடும் குறைபாடுடையவர். ஆகையால், சுவர்களைவிட அதிக சன்னல்கள் இருக்கவேண்டியது ஆவசீகமாகும், அன்றியும் கல்விசெய்யவேண்டிய வேலை, தற்கால விருத்தியை அனுசரித்து இருக்கவேண்டியது மாத்திரமே அல்ல; அதற்கு மேல் தற்காலத்திற்கு அப்பால், நம்மை நடத்தவேண்டியதும் அதன் முக்கியமான வேலை. ஒவ்வொருகாரியத்திலும் நடக்கிறதுபோலவே, படிப்பிலும் இந்நாட்களில்

காரியங்கள் வெகுவிரைவில் விருத்தியாய்க்கொண்டு வருகின்றன. ஆகையால் நாமும் நம்நாடும் இயற்கையாக ஏற்பட்ட நம்முடைய சுதந்திர பாத்தியதையைப் பாராட்டி, விமரிசையோடு காலத்தை அனுசரித்துக் கருத்தாக வேலை செய்துகொண்டு முன் சென்றால் ஒழிய உலகத்துத் தேசிய சாதியார் விருத்தியடைந்து முன் செல்ல ஒருவேளை நாம் பின்னடைந்து போவோம் போல் தோன்றுகின்றது.

எல்லாவற்றைப் பார்க்கிலும் முதன்மையான விஷயம் ஒன்று உண்டு. வீட்டுக்கும் பள்ளிக்கூடத்திற்கும், வீட்டுப் பழக்க வொழுக்க ஆசாரங்களுக்கும் பள்ளிக்கூடத்துப் பழக்க வொழுக்க ஆசாரங்களுக்கும் விரோதங்கள் இல்லாமல் பொருத்தம் இருக்க வேண்டியது அவசியம். இது மிகவும் முக்கியமான விஷயம். காரியங்களை உள்ளபடி கவனித்தால் வீட்டுப் போக்கு வேறே. விபரீதமாகப் பள்ளிக்கூடத்துப் போக்கு வேறே. இரண்டிற்கும் பொருத்தம் கிடையவே கிடையாது. வீட்டார் பள்ளிக்கூடத்துப் போக்கை உணர்ந்து அறியாமல் அது தங்கள் காரியம் அல்லவென்று எண்ணமற்றிருக்கிறார்கள். பள்ளிக்கூடமோ அந்நியரால் ஆளப்பட்டு அவனைப் பின்பற்றுகிறது. வீட்டிலோ யோசனையில்லாமல் சிலர் தங்கள் பிள்ளைகளைச் சீராட்டிப் பாராட்டுகிறார்கள். சிலர் முரட்டுத்தனமாய் அடித்துக் கொடுமையாய் நடத்துகிறார்கள். பள்ளிக்கூடத்திலோ, தங்கள் நாகரீகம் இயற்கையாகவே, இழிந்தது என்றும் அந்நிய நாகரீகமே சிறந்தது என்றும் இப்படி விபரீதக் கருத்துகள் நினைத்து வேரூன்றும்படி இடைவிடாது விடாமுயற்சியாய் வேலை செய்கிறார்கள். ஆனதுபற்றி நம்மவர்கள் கோழைத்தனங் கொண்டு பயந்து, உண்மையாகத் தங்கள் கருத்தை எடுத்தாள ஆண்மை இன்றி, அடங்கி இருக்கின்றனர். இது விஷயம் ஆச்சரியம் அல்ல. தற்காலத்தில் இருக்கிறபடி இந்திய உபராத்தியாயரும் கூட "தான் ஒரு உத்தியோ

கஸ்தன்.'' என்னும் அகம்பாவம் உள்ளவனாய் ஆண்டு, அடக்கும் விபரீத குணமுள்ளவனாக இருக்கிறான். பயமும் சந்தேகமும் எங்கே பார்த்தாலும் சரி வீட்டிலும் பள்ளிக்கூடத்திலும் நிறைந்திருக்கின்றன. சிநேகமும் தெய்வபக்தியும், சுதேசிய சுகிர்த கருத்துகளும் ஆண்டு நடக்க அவரவர் இருதயத்தில் ஆண்டவன் ஒருவர் இருக்கிறார் என்னும் நம்பிக்கையும் அதை மனதில் மரியாதையுடன் அங்கீகாரம் செய்யும் குணமும் அவர் விழிப்புக்கொண்டு வேலைசெய்ய அவருடைய சக்திகள் விருத்தியாகும்படி அனுகூலமாக எல்லா வெளிப்படிப்பும் முறையும் அமர்ந்து ஒழுகும் அமைதியும் ஆகிய இந்தச் சிறந்த குணங்கள் நமமுடைய வாலிபர்களைப் படிக்க அதிகாரத்தைத் தங்களிடத்துக் கொண்டிருக்கும் கனவான்களிடத்தில் விளங்கித் தோன்றுவதாகக் காணவில்லையே. கல்வியைக் கற்றுக் காசு சம்பாதிக்க வேண்டுமென்னும் ஆசை மிகுதியினாலே, "உண்மையான படிப்பு உள்ளத்தை உயிருள்ள பொருளாக அங்கீகாரம் செய்து வெளியே இருந்து அதற்குக் கிடைக்கக் கூடியதைவிட, அது தானே விகசித்துத் தன் குணத்தை அதிகமதிகமாக வெளிப்படுத்தும்படி செய்ய வேண்டியது அதன் வேலை'' என்பதை நாம் மறந்து விட்டோம். பெற்றோர் தங்கள் சொந்த சுகத்தையும் வரும்படியையும் மாத்திரமே கவனிக்கிறார்கள். உபாத்தியாயர்களோ, மறுபடியும் ரவீந்திர நாத தாகூரவர்கள் சொல்லுகிறது போலவே, "பிள்ளைகளுக்குப் புஸ்தகப்படிப்பைப் புகட்டித் தங்கள் மூலியமாகப் புத்தகக் கடையில் காகிதக் கடவுள் பேசுகிறதாகக் காட்டுகிறார்களே அன்றி மற்றபடி ஒன்றும் இல்லை.

இம்மாதிரியான விபரீதங்களைச் சீர்திருத்தம் செய்வதற்காக விரும்பி 1915-ஆம் வருஷத்து சுதேசிய வாரத்தில் இந்தியாவிலுள்ள சில சிறந்த கல்வி விருத்தி சுதேசாபிமானிகள், "பெற்றோர்கள் உபாத்தியாயர்கள் ஒற்றுமைச் சங்கம்." என்று ஓர் உத்தம சங்கத்தை உற்பத்தி செய்

தார்கள். இச்சங்கம் அந்நாள் முதல் சிசுக்ஷக முறையைப் புத்திசாலித்தனமாய் உபயோகப்படுத்த வேண்டுமென்றும் குழந்தைகளை விசாரணை செய்து அறிந்து, அவர்கள் கஷ்டங்களை அங்கீகாரம் பண்ணி அவர்களிடத்து அடங்கி இருக்கும் தெய்வீகப்பொறியை மரியாதையாக ஏற்றுக்கொண்டு அது விகசித்து புறத்தே வேலை செய்யும்படி விருத்திக்குக் கொண்டுவர வேண்டியது அவசியமென்றும் வெளிப்படுத்திக் கொண்டுவருகிறது. நம்முடைய தாயாகிய பிரியமுள்ள நம்முடைய இந்தியா தேசமெங்கும் பெற்றோர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் ஆனமட்டும் அருமையாக இந்த விஷயங்களைப்பற்றி உபந்நியாசங்கள் செய்வதினாலும் பூதகண்ணாடியைக் கொண்டு காட்சிப்படங்களைக் காண்பிப்பதினாலும், இங்கிலீஷிலும் மற்ற நம்நாட்டு பஷைகளிலும் இந்த விஷயமாகச் சில சில்லரைப் பத்திரிகைகளை அச்சிட்டு அங்குமிங்கும் அனுப்புவதினாலும் இச்சங்கத்தின் சுகிருதக் கருத்துகளை வெளிப்படுத்தி, இனிமேல் நம்முடைய நாட்டு நகரவாசிகளாகிக் காரியங்களைக்கருத்துடன் நடத்தத் தயாராகும் சிறுவர்கள் சிறுமிகள் பொருட்டுச் சரியான கருத்துகளையும் விருத்தியாகும் முறைகளையும் வெளியிட்டுவருகின்றது.

இந்தியா இலங்கை பர்மா ஆசியா இந்நாட்டு எல்லாப்பக்கங்களிலும் இருந்து ஞானவிருத்தியடைந்த புண்ணியர்கள், புருஷர்களும், ஸ்திரிகளும், எல்லாரும் இச்சங்கத்து அங்கத்தினராகவும இதை ஆதரிக்கிறவர்களாகவும் இருக்கின்றனர். பாலிய இந்தியாவின் பரிதாபமான கூக்குரலைக் கேட்கக்கூடிய நிலைமையில் நீங்கள் இருந்தாலும், அப்படிக்கேட்டு இனிவிருத்தியாக வேண்டிய நம்முடைய பின் சந்ததியாருடைய காரியங்களில் கருத்துவைத்து அவர்கள்விஷயத்தில் பூர்த்தியான அபிமானம் கொஞ்சம் காட்ட மனமுடையவர்களாக இருந்

தாலும் உடனே இச்சங்கத்தார் பிரசுரம் செய்யும் சஞ்சிகைகளைத் தருவித்தும் எல்லாரும் படிக்கும்படியாகப் பிரார்த்திக்கும் புஸ்தகங்களை நன்ருய் யோசித்துப்படித்தும்—இவ்வாறு உங்களால் ஆனமட்டும் வீட்டிலும் பள்ளிக்கூடங்களிலுமுள்ள நம் சிறுவர்கள் தடையின்றி விருத்தியாகும் நாட்டத்தைக் கைக்கொள்ளுவீர்கள்.

ஞானனுபவ சுதந்தரபாத்தியதையுள்ள இந்நாடு இனி உயர்ந்த நிலைமைக்குவரும். உலகத்தில் நாகரீக விருத்தி அடைந்திருக்கும் நாட்டார் எல்லாருக்கும் சமாதானம் சிநேகம் ஒற்றுமை நிறைந்த சுவிசேஷத்தைக் கொண்டுபோக பகவான் அனுக்கிரகம் பெற்றது இந்நாடு. ஆகையால் இந்த உயர்ந்த ஊழியத்தை பகவான் பொருட்டுச்செய்யத் தகுந்தபடி தக்க முயற்சி எடுக்கவேண்டிது அவசியம். இக்காலத்துச்சிறுவர்கள் இனிவருங்காலத்து நல்ல நகரவாசிகள் ஆவார். ஆகையால் இவர்கள் பொருத்தம், சந்தோஷம், ஒற்றுமை, முதலிய சிறந்தகுணங்கள் நிறைந்து வளர்ந்து விருத்தியாகும்படி செய்ய வேண்டியது உங்களுடைய உண்மையான உத்தம ஊழியமென்று அருமைத்தாயாராகிய இந்தியமாதா அன்புடன் உங்களுக்கு ஆசீர்வாதம் சொல்லி முறையிடுகின்றனர். ஆகையால் வாருங்கள்! ஏற்றுக்கொள்ளுங்கள்! வேலைசெய்யுங்கள்! வியர்த்தமாக வீண்நேரம் போக்காதேயுங்கள்! கண்விழித்து எழுந்திருங்கள்! காரியத்தை உற்றுப்பாருங்கள்! என்றென்றைக்கும் எல்லாபாக்கியங்களையும் ஆண்டு கொள்ளுங்கள்! (மொழிபெயர்த்தது.)

ஜி. பரஞ்சோதியார்—கோயமுத்தூர்.

பத்திரிகை விமர்சம்.

தாரகதூதன்:—3-வது தொகுதி 2-ம் பகுதியைப் பெற்று மிகவும் சந்தோஷத்துடன் முற்றிலும் படித்துப் பார்த்தோம். இதில் வெளி வந்திருக்கும் எல்லா வியாஸங்க

றும் எளிய தமிழ் நடையில் யாவரும் எளிதில் உணரும்படி எழுதப்பட்டிருக்கின்றன. பாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையவர்களின் உபந்யாஸங்களின் மொழிபெயர்ப்பும் ஸ்ரீமான் வி. ஜினராஜ தாஸர் அவர்களின் உபந்யாசத்தின் மொழிபெயர்ப்பும் வெளிவந்திருக்கின்றன. ஜகத் குருவின் வருகையைப்பற்றி ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி ஐயர் வெகு அழகாய் கூறியிருக்கிறார். அடுத்த சஞ்சிகையில் ஜகத்குரு எப்போது வரப்போகிறார் என்பதைப்பற்றியும் தாரக சங்கத்தின் இரண்டாவது கொள்கையைப் பற்றியும் எழுதப்போவதாக ஐயர் அவர்கள் சொல்லியிருக்கிறார். அதை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இப்பத்திரிகைக்குத் தமிழ் வல்லோர் அநேகர் கட்டுரைகளையும் மொழிபெயர்ப்புகளையும் அனுப்பமுன் வந்திருப்பதைப் பற்றி மிகவும் ஆனந்தமடைகிறோம். ஸ்ரீமான் பரஞ்சோதியாருடையவும் ஸ்ரீமான் சுந்தரராஜய்யருடையவும் உதவியானது இப்பத்திரிகைக்குக் கிடைத்திருப்பது மிகவும் சந்தோஷத்துக்குக் காரணமானது. இப்பத்திரிகை யாவரும் ஆதரிக்க வேண்டியது அவசியமான விஷயம்.

தமிழகம்:—இது வாரம் இருமுறை ஐக்கியமலாய் நாட்டில் கோலாலம் பூரிலிருந்து வெளிவரும் தமிழ்ப்பத்திரிகை. அத்தேசத்திற்கு வியாபாரம் லேவாதேவி விஷயமாயும் தேயிலை முதலிய தோட்டங்களில் வேலை செய்யும் விஷயமாயும் அநேகம் தமிழர்கள் போயிருக்கிறார்கள். அவர்களின் முன்னேற்றத்தை யுத்தேசித்தும் இந்தியாவுக்கும் அத்தேசத்திற்கும் பாஷாசம்பந்தமும், சமாசாரப் போக்குவரத்தும் இருக்கும் வண்ணமும் இப்பத்திரிகை பிரசுரம் செய்யப்படிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தியாவுக்கு வெளியில் பிரசுரமாகும் ஒரு பத்திரிகையாவது இவ்வளவு அழகான தெளிவான தமிழ் நடையில், உயர்ந்த பத்திரிகைகளின் வழியை யனுசரித்து நடந்து வருவது மிகவும் சந்தோஷத்திற்குக் காரணமாகின்றது.

பற்பல வாரங்களாய் வெளிவந்த சஞ்சிகைகளைப் பார்க்க பத்திரிகாசிரியஸ்தானத்தை வகித்திருப்பவர் கல்வி கேள்விகளில் தேர்ந்தவர் என்றும் தேசாபிமானத்திலும், பாஷாபிமானத்திலும் முதிர்ந்தவர் என்றும், இந்துமதத்தின் அறிவிலும், இந்துக்களின் சீர்திருத்தத்திலும் முன்னேற்றத்திலும் கருத்து வைத்தவர் என்றும் நன்றாகத் தோன்றுகின்றது. இப்பத்திரிகை நீடூழி வாழ்ந்து இக்கற்றொண்டை சரி செய்து வருமாக.

பகவத்கீதை.

ஸ்வதர்மம்.

குருக்ஷேத்ரத்தில், போர்க்கோலத்துடன், பகைவர் முன் ரதாரூடனாய் நிற்கும் அர்ஜுனன், இஷ்டர் பந்துக்கள் எதிரிகளாய் நிற்பதைப்பார்த்து மதிமயங்கி, தன் ஸாரதியான கிருஷ்ணபகவானைப் பார்த்து.

(1) நான் ஏன் போர் புரிய வேண்டும்?

(2) இப்போரினால் எனக்காவதென்ன?

(3) ஜயாபஜயமோ சஞ்சலமானது?

(4) நம்மவரையே கொன்று நாம் அரசாளுவதிலும், பிச்சை யெடுத்துண்ணலாகாதா?

இவை போன்ற இன்னும் பல கேள்விகள், ஆங்காங்கு ஸமயோசிதமாய்க் கேட்க, கிருஷ்ணன் ஒவ்வொன்றுக்கும் பதிலுரைத்து, கடைசியாய், 'போர் புரிய மாட்டேன்' என்று வில்லை யெறிந்த அர்ஜுனனை மறுபடி போர் புரியச் செய்தார்.

பல கேள்விகளுக்குப் பலவிதமாய் விடையளித்து வருகையில், ஸ்வதர்மம் இன்னதென்றும், ஸ்வதர்மத்தை ஒவ்வொருவனும் செய்தே தீரவேண்டும் என்றும், ஒன்றும் செய்யாது ஒருவனும் இருக்கவே முடியாதென்றும், தானாய் முறைப்படி தன் கர்மாக்களைச் செய்யாதவனை கை, கால், மனம், புத்தி என்ற இந்திரியங்கள், பிரகிருதி குணங்களுக்குட் பட்டுத் தத் தம் போக்குப்படி சேஷ்டைகள் செய்து ஸாரதியற்ற தேர்போலப் பல துன்பங்களுக்கிரையாக்கிவிடுமென்றும் கூறிவருகிறார். பார வித்யார்த்திகளுக்குப் பகவத் கீதையில் பல அரிய பொருள்கள் தென்படுமாயினும், லௌகீகர் முக்கியமாய் அறிந்து கொள்ளவேண்டிய நாடோடியான ஸ்வதர்மம் (One's Own Duty) என்ற விஷயம் பகவத்கீதையின் பேரம்சமாக விளங்குகின்றது.

ஸ்வதர்மத்தைப்பற்றி விசேஷமாய் உபதேசித்து வரும் மத்தியில், ஸங்யாஸம், யோகம், தியாகம், என்ற விஷயத்தைப்பற்றி விவரிக்க நேர்கின்றது.

கர்மம்.	விகர்மம்.
(செய்யத்தக்கது)	(செய்யத்தகாதது)

கர்மம்:

காம்யகர்மம்.	நிஷ்காமகர்மம்.
{ஸ்வப்பிரயோஜனத்தை உத்தேசித்துச் செய்வது.}	{ஸ்வப்பிரயோஜனத்தை எதிர்பாராது செய்வது.}

(1) இதில் காம்யகர்மம் செய்பவன், ஐஹிக ஆமுஷ்மிகமான உத்தேசித்த லாபத்தை மாத்திரம் அடைகிறான்.

நிஷ்காமகர்மம் செய்பவன் ஆமுஷ்மிகமான மோக்ஷத்தை யடைகிறான்.

(2) காம்யகர்மிக்குக் கர்மபந்தமுண்டு. கர்மபலனுள்ளவரை யனுபவித்துப் பிறகு பூர்வஸ்திதிக்கு வந்துவிடுகிறான்.

ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யுః
த்ருவம் ஜன்ம ம்ருதஸ்யச!

என்ற வாக்கியப்படி ஜனனமரண ஸம்ஸாரபந்தம் ஏற்பட்டு, மோக்ஷமடைய மார்க்கமில்லாமலே போய் விடுகிறது.

கர்மத்தைப்பற்றி விவரிக்குமிடத்தில், பொதுவாய்ச் சில அம்சங்கள் கவனிக்கத்தக்கவை.

அவையாவன:—

(1) விகர்மம் செய்பத்தகாதவை. அக்ரமச் செய்கை. செய்யவே கூடாது.

(2) அகர்மம். நல்லதோ கெட்டதோ, ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்து விடுவது. செய்வானேன். கெட்ட செய்கை என்ற தாழ்வும் வேண்டாம்: நல்ல செய்கை என்ற வாழ்வும் வேண்டாம். இதுதான் கர்ம ஸந்யாஸ வாதம்.

(3) கர்மம். செய்யத்தக்கது.

(4) நியதகர்மம். (Prescribed duty) செய்து தீர வேண்டியது,

(5) காம்ய கர்மம். (Optional) இஷ்ட முண்டானல் செய்யலாம்,

(5) நிஷ்காமிய கர்மம். ஆனால் பலனை அபேட்சித்துச் செய்யும் செய்கையால், அக்கர்ம பலன் உள்ளவரை அநித்யமான பலனை யனுபவித்து அது முடிந்ததும் மறுபடி பூர்வ ஸ்திதிக்கு வந்து சேருகிறான்.

ஸ்வர்க்கம் அடைய விரும்புபவன் ஜ்யோதிஷ்டோமம் என்ற யாகம் செய்யவேண்டும். அப்படிச் செய்து, அதன் பலனுள்ள வரை ஸ்வர்க்கத்தில் வாழ்ந்து, பிறகு அப்பலன் முடிவில் மறுபடி மனிதலோகம் வந்து சேருகிறான்.

இங்கு, ஜியோதிஷ்டோமம் என்பது காம்ய கர்மம் அதன் பலனான ஸ்வர்க்கமும். ஸ்வர்க்கமும் அநித்தியமானது. இவ்வாறு காம்யகர்மி, திரும்பத் திரும்பச் சுழன்று கொண்டே இருந்தால், நித்யமான மோக்ஷமடைய அவனுக்கு வழியில்லாமலே போய் விடுகிறது. இதை உத்தேசித்து இதற்கு அடுத்தபடியான நிஷ்காம கர்மமுறை யொன்று அறிஞர் கற்பித்திருக்கிறார்கள்.

நிஷ்காமகர்மம்
- (1) செய்யத்தக்கதைச் செய்வது.
- (2) ஆனால் பலனை அபேட்சியாமல் செய்வது.
- (3) அப்படியானால், செய்தும் செய்யாதவன் போல் நைஷ்கர்ம்ய நிலையடைகிறான்

நிஷ்கர்ம அல்லது நைஷ்கர்ம்ய நிலைமையாவது கர்மத்தைச் செய்தபோதிலும் நிஷ்காமமாய்ச் செய்தால் அதன் சுகதுக்கங்கள் கர்த்தாவை அணுகவேமாட்டா.

பத்ம பத்ர மிவாம்பஸி [கீதை 5-10].

என்றபடி தாமரையிலை தண்ணீர் போல் பட்டும் படாதவனாய், தொட்டும் தொடாதவனாய், செய்தும் செய்யாதவனாய் இருப்பான்.

மூன்று மதங்கள்:—

(1) கர்மஸந்யாஸம். கர்மங்களையே முற்றிலும் விட்டு விடுவது.

(2) கர்ம யோகம். நிஷ்காமமாய்க் கர்மங்களைச் செய்வது.

(3) கர்மத்யாகம். அதனால் எதிர்பாராது, வரும் பலன்களை தான் உபயோகியாமல், லோகோபகாரமாய் அர்ப்பணம் செய்வது.

இவைகள் ஒரு மதத்தையாவது கீதையில் கண்டிக்கவில்லை. ஆனால் "ஸந்யாசத்தைப் பார்க்கிலும் யோகம் தான் சிறந்தது; அத்துடன் த்யாகமும் செய்து விட்டால் அவன் நைஷ்கர்ம்ய பலனான மோக்ஷத்தையடைகிறான்." இதுதான் கீதையின் முக்யக் கருத்து.

குறிப்பு:—

கர்ம. செய்கை. Action. செய்யவேண்டியது.

அகர்ம. செய்யாமை. Non-action.

விகர்ம. செய்யத்தகாதது.

நிஷ்கர்ம. செய்தும் கர்மபந்தமில்லாமை.

கர்மஸந்யாஸம். காம்யானாம் கர்மணாம் ந்யாஸம்

காம்ய கர்மங்களைச் செய்யாமை.

கர்மயோகம். நியதமும் நிஷ்காமகர்மங்களும் செய்தல்.

கர்மத்யாகம். கர்மத்தைச் செய்தல். யதருச்சை யாய் வரும்பலனை பரோபகாரமாய் அர்ப்பணம் செய்தல்.

ஸந்யாஸயோகம்:—

(1) காம்ய கர்மங்களை விட்டு.

(2) நிஷ்காமநியத—கர்மங்களைச் செய்தல்.

காம்யகர்ம. ஸ்வபிரயோஜனத்தைக் கருதிச் செய்தல்

நிஷ்காமகர்ம. ஸ்வபிரயோஜனத்தைக் கருதாது செய்தல்.

(To be continued).

ஆர், எஸ். நாராயணஸ்வாமி அய்யா, பி. ஏ. பி. எல்.
மதுரை.

மனப்பண்புகளின் சேர்க்கை.

மேல்நாட்டாருக்கு இது ஜயகாலம் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். உலகமே அவர்களது. அவர்கள் செல்வத்துக்கோ அளவில்லை. அவர்கள் இவ்வுலகத்தில் இஷ்டப்படி செய்ய இயல்கின்றது. நமது செல்வம் வர வரக் குறைவதையும் நமது நிலைமை வர வரக் கேவலமாய் வருவதையும் பற்றி யோசித்துக்கொண்டு, விலகி நின்று கொட்டாவி விட்டுக் கொண்டிருக்க வேண்டியது நம் கதியாயிற்று. பசியாத்திரத்தால் நமக்குக் கோபம் மாத்திரம் வருகிறது. நமது செல்வத்தை அபகரித்துக்கொண்டவரிடமிருந்து எப்படியாவது அதைப் பிடுங்கிக் கொள்ளச் சமயம் வாய்க்காதா வென்று ஆசை மாத்திரம் படுகிறோம், ஆனால் அது நமக்குச் சிக்கவில்லை.

ஆனால் ஏன் நமக்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லை? உலகத்தில் உள்ள பாக்கியம் எல்லாம் அவர்கள் மட்டும் அனுபவிக்கும்படி ஏன் லபித்திருக்கிறது? ஏதாவது ஒரு உண்மையான காரணம் இருக்க வேண்டுமெல்லவா? நாம் எல்லாரும் ஒரு விதமாய் ஒன்று சேர்ந்து எப்படியாவது அவர்களை அடித்துத் துரத்தி அவர்கள் செல்வத்தைப் பிடுங்கிக் கொள்ளலாமா வென்றால் அது சாத்தியமாகாது போலிருக்கிறது. அவ்வளவு அற்பமான காரியமல்ல வென்று நினைக்கவேண்டியிருக்கிறது. புகைவண்டியை நம் கைகவசப்படுத்த வேண்டுமென்று ஆசைப்பட்டால் புகைவண்டிச் சூத்திரத்தை ஓட்டுபவனைக் கொல்வதால் அது சாத்தியமாகுமோ? அவனு வண்டியை ஓடும்படி செய்கிறான். வண்டியோட்டும் சாஸ்திர அறிவல்லவா ஓடும்படி செய்கிறது? ஆகையால் வீணில் கோபப்பட்டால் என்னபயன்? வேண்டிய வித்தையைக் கற்றால் அவ்வித்தையாகிற உண்மையால் கிடைக்கக்கூடிய பயனை அடையக்கூடும்.

ஒரு தகப்பனுக்கு இரண்டு பிள்ளைகள்; தகப்பனுக்குத் தானே "மோட்டார்" வண்டியை ஓட்டத்தெரியும். மோட்டார் வண்டியை முதலில் தானே யோட்டக் கற்றுக் கொள்ளுகிறவனுக்கு மோட்டாரை இனமாகக் கொடுப்பதாக இருவருக்கும் சொன்னான். இளையவன் கெட்டிக்காரன். சிக்கிரம் அவ்வித்தையைக் கற்றுக்கொண்டான். மூத்தவன் சாது. தகப்பனார் முகத்தை மிகவும் பயபக்தியுடன் பார்த்த வண்ணமாயிருந்தான். மோட்டாரை எப்படி ஓட்டுகிறது, எப்படித் திருப்புகிறது என்பதை யெல்லாம் கவனிக்காமலிருந்தான். சுறுசுறுப்புள்ள இளையவன் மோட்டார் வித்தையைக் கற்றுக் கொண்டவனுகையால் ஒருநாள் காலையில் மோட்டாரில் தனியாய் ஏறிச் சவாரி செய்து கொண்டு உல்லாசமாக "பம்" "பம்" என்று ஊதை ஊதிக்கொண்டு செல்கிறான். அவனுடைய உற்சாகத்தில் தகப்பனரைக் கூட மறந்து விடுகிறான். ஆனால்

அதற்காகத் தகப்பனார் அவனுடன் கோபப்படுகிறாரா? அவனைத் தண்டிக்கிறாரா? அவனிடமிருந்து மோட்டாரைப் பிடுங்கி விடுகிறாரா? இல்லை. நம்முடைய பிள்ளை கெட்டிக்காரனாய் மோட்டார் விடுவதில் இவ்வளவு சமர்த்தனாயிருக்கிறான் என்று சந்தோஷப்படுகிறார். இளையவன் அலக்ஷியமாக மோட்டாரை வயல் வரப்புகளில் எல்லாம் விட்டு பயிர் பச்சைகளை யெல்லாம் சேதமாக்கினாலும்; மூத்தவன் பயந்த வண்ணமாயிருக்கிறான். தகப்பனார் பெயரைச் சொல்லிக் கூட இளையவனிடம் ஆக்ஷேபணை செய்ய யோசிக்கிறான். எதிராக நின்று தடுத்தால் எங்கே மோட்டார் தன் பேரில் ஏறித்தன்னைக் கொன்று விடுமோ என்று பயம். ஆகையால் தகப்பனார் முகத்தைப் பார்த்தவண்ணமாய் அந்த பாக்கியம் எனக்குப் போதும் என்று எண்ணியிருக்கிறான் மூத்தவன்.

உபயோகமுள்ள வஸ்துவை அலக்ஷ்யம் செய்து தனக்குத் தேவையில்லை என்று தள்ளுபவன், வேண்டுமென்றே கஷ்டத்தைத் தேடிக்கொள்ளுகிறான். ஒவ்வொரு உபயோகமுள்ள வஸ்துவையும் நியாயமாய் உபயோகிப்பது தான் ஏற்றது. இல்லாவிடில் அதே உபயோகத்தையடைவதற்காக அதிகமாகச் சிரமப்பட்டு வட்டியும் முதலுமாகச் செலுத்த தான் வேண்டும். அவனவன் பாடத்தைச் சரியானபடி படித்தால் ஒழிய உபாத்தியாயர் கவனத்தைத் தவிர்க்க முடியாது.

வெளிப்பார்வையாகப் பார்க்குமிடத்து ஜகத்தை ஒரு பெரிய யந்திரமாகக் கூறலாம். அவ்வியந்திரத்தின் விதிகள் மாறுதலவையாகும். இப்படியாவது அப்படியாவது கொஞ்சமேனும் பிசகாவாம். அவைகளை ஏமாற்றலாம் என்று நினைப்பவன் தான் ஏமாறுகிறான். ஒவ்வொரு நிமிஷத்திலும் அவ்விதிகளுக்குட்பட்டுத் தான் நாம் நடக்கவேண்டியிருக்கிறது. ஆனால் அவ்விதிகளை நன்கறிந்தவனே அவ்வியந்திரத்தினால் இடர்ப் படாதிருப்ப

தோடு அதனைத் தனக்கு ஏற்ற வாகனமாக்கிக் கொண்டு உலகத்தில் சுலபமாய்ச் சஞ்சரிக்க ஏற்ற கருவியாக்கிக் கொள்கிறான். தான் தேடும் இடத்திற்கு முதற்சென்று அங்கேயிருக்கும் போக்கிய வஸ்துக்களை யெல்லாம் கைப்பற்றி அனுபவிக்கிறான். மற்றவர்களோ இக்கருவியின் உதவியின்றி, தள்ளாடிக் கொண்டு மெள்ள மெள்ளத் தனியே அவ்விடத்திற்குச் செல்வதற்குள் எல்லாவற்றையும் முந்தினவன் கைப்பற்றி விட்டதைப் பார்த்து வருந்துகின்றனர்.

உண்மையிப்படியிருக்க, தற்கால உலகத்தில் மேனாட்டார் எந்த வித்தையைக் கொண்டு வெற்றி பெற்றிருக்கின்றனரோ, அவ்வித்தையை நிந்திப்பதினால் நமது கஷ்டங்கள் நீங்கா. ஆனால் அவைகள் ஒரு வேளை அதிகரிக்கலாம். ஏனெனில், மேனாட்டார் கைக்கொண்டிருக்கும் அவ்வித்யையானது ஸத்யத்தின் ஓர் அம்சமாகும். ஸத்யத்தை அலக்ஷ்யஞ்செய்வது ஒருக்காலும் நேராகாது. ஆனால் மேனாட்டாருடைய வித்தையை நாம் வெறுக்கவில்லை யென்றும், அவ்வித்தையைக் கெட்ட வழியில் உபயோகிப்பதையே நாம் வெறுக்கிறோம் என்றும் கூறின், அதைப்பற்றிக் கவலைப் படவேண்டாம். ஏனெனில் உண்மையல்லா வழி நிலைக்காது. அவ்வழிச் செல்லும் எதுவும் சீக்கிரம் தொலையும்.

இரை கிடைத்தால் உயிர் வாழ்வதும், அடிபட்டால் சாவதும், மிருகங்களின் இயற்கை. வருவதை ஆக்ஷேபிக்காமல் ஏற்றுக் கொள்வது அவைகளின் சுபாவம். ஆனால் மனிதனுடைய மேன்மையான குணங்களுள் ஒன்று யாதெனின் ஆக்ஷேபிக்கும் வழக்கம். அவன் இயற்கையிலேயே பிறர்க்கடங்காதவன். தன்னுடைய சம்மதம் அல்லது உதவியின்றி வெளியிலிருந்து இடப்பட்ட எந்த நிர்ப்பந்தத்திற்கும் உட்படாமலிருந்து அதை நீக்க முயன்று வரும் வழக்கத்தால் தான் மனிதன் உலகத்தில் அடைந்திருக்கிற மிக மேன்மையான நிலைமைக்கு வந்திருக்கிறான். ஆகையால்

சுருங்க சொல்லின், மனிதன் "சாது" வானவன் என்று சொல்லமுடியாது. எப்போதும் ஒருவருக்கும் அடங்காதவன் என்று சொல்லவேண்டும். உலக நிகழ்ச்சிகளை மாற்றவே கங்கணம் கட்டிக் கொண்டவனுகிருன். எப்படி என்றுல் ஒரு நிகழ்ச்சிக்குக் கொண்டுவிடும் காரணங்களைக் காணுவானுயின் அவன் அவைகளுக்குச் சம்மதிப்பவனுயாவது அல்லது அவைகளை மாற்றுபவனுயாவது ஆகிருன். அதாவது அவன் கர்த்தாவாகவே யிருக்கிருன். ஒருக்காலும் காரியமாக மாட்டான். ஜால வித்தைகளை முதலில் கற்க ஆரம்பித்தான். ஏனெனில் வெளியில் பார்க்கப்படும் எல்லாம் திரைக்குள் நடக்கும் ஜாலவித்தையின் ஆச்சரியமான தோற்றங்களே என்று எண்ணிதானும் அவ்வித்தையைக் கைப்பற்றலாம் என்று ஆரம்பித்தான். ஜாலவித்தையை அப்பியாஸம் செய்து கடைசியில் சாஸ்திர அப்பியாஸியாய் முடிந்தான். இரண்டுக்கும் பொதுவானது யாதெனில், இயற்கையின் சக்திகளுக்கு அடங்கியிருக்கும் சுபாவ மின்மையே இவ்விரண்டிற்கும் காரணம். இதில் தேர்ந்தவர்கள் திருசியமான வஸ்துக்களை ஆளக்கூடியவர்களானுர்கள். அவைகளுக்குட்பட்டவர்களாக யிருக்கவில்லை.

பிரபஞ்ச விதிகள் யாவும் எக்காலத்தும் எவ்விடத்தும் மாருதவை என்ற திடமான நம்பிக்கை தான் சாஸ்திரத்திற்கு அடிப்படையாகும். இதை நம்பி வேலை செய்வதால் மேனுட்டார் ஜயம் பெறுகின்றனர். யாது இடர் வரினும் இடையூறு நேரிடினும் அவைகளை வெல்கின்றனர். மந்திரத்தினுல் மாங்காய் விழச்செய்யமுடியும் என்ற நம்பிக்கையுள்ளவர்கள் உலகத்தை ஜயிக்கமுடியாமல் தள்ளாடித் தவிக்கின்றனர். அவர்கள் தொட்டதெல்லாம் தொலங்குகிறதில்லை. நாம் தீங்குகளைநீக்குவதற்கு மந்திரவாதியையும் மில்விசூன்யக்காரனையும் நம்பிக்கொண்டும் தரித்திரத்தைபும் கஷ்ட காலத்தை போக்கடிக்க ஜோஸ்ய

ரையும் நம்பிக்கொண்டும் வசூரியைத் தடுப்பதற்கு அம்மை நாச்சியாரை நம்பிக்கொண்டும் இருந்தகாலத்தில் பிரான்ஸ் தேசத்தில் வால்டேர் என்ற ஒரு புத்திமானை ஒரு பிரெஞ்சுக் காரப்பெண் மந்திரத்தால் ஒரு ஆட்டுமந்தையை மறலிக் கிரையாக்க முடியுமா வென்று கேட்டதற்கு அவர் "ஆம் முடியும் போதுமான வெள்ளைப்பாஷாணமும் இருந்தால்" என்றாராம். மேல் நாட்டில் மந்திரத்தில் நம்பிக்கையுள்ள வர்கள் இக்காலத்திலும் இல்லையென்று நான் சொல்லவில்லை. ஆனால் பாஷாணத்தின் பிரபாவத்தில் நம்பிக்கையுள்ளவர் கள் நிச்சயமாய் அங்கே எங்கும் இருக்கிறார்கள், அத னால் அவர்கள் இஷ்டப்பட்டால் பிராணிகளின் உயிரை மாய்க்க அவர்களால் முடிகிறது. நாமோ இஷ்டப்படா விடினும் உயிரை விடவேண்டியிருக்கிறது.

தற்கால நிலைமை.

(96மக்கம் தொடர்ச்சி.)

மைசூர் ராஜ்யமானது மிகவும் முன்னேற்றமுள்ள சுதேச ராஜாங்கங்களுள் முதன்மையானது என்பது யாவரும் அறிந்த விஷயம். ராஜதர்மப் பிரவீண ஜஸ்டிஸ் சந்திரசேகரையர் அவர்களின் மனைவியாரைப் பற்றி நமது பூர்ணசந்திரோதயப் பத்திரிகையை வாசிப்போர் அனை வரும் அறிவார்கள். பங்களூரிலிருக்கும் மஹிலா ஸமாஜத் திற்கு அவர் அக்கிராஸனர். ஸ்திரீகள் முன்னேற்ற விஷயமாய் மிகவும் உழைத்துவருகின்றனர். ஸ்திரீகளில் முக்கியஸ்தர்களுடன் தாம் தலைவியா யமைந்து மைசூர் திவான் அவர்களைக் கண்டு பேசி ஸ்திரீகளுக்கும் வோட்டு

ரிமை கொடுக்கவேண்டும் என்று கேட்டதாயும், அதற்கு திவானவர்கள் ஆதள்வாக செவிசாய்த்து கேட்டதாயும், மைசூர் சட்டசபையின் அடுத்த சந்திப்பில் இவ்விஷயமாய் சர்ச்சைசெய்து தீர்மானிப்பதாய் வாக்களித்தாயும் தெரியவருகிறது. மைசூரில் ஸ்திரீகளுக்கு வோட்டுரிமை கிடைத்துவிட்டால் மற்ற ராஜாங்கங்களிலும் சீக்கிரத்தில் அது கிட்டும் என்று நம்பலாம்.

***

சென்னைராஜதானியில் நெல்லூர் முனிசிபாலிடியில் நரசிம்மையாவின் மனைவியார் முனிசிபல் கவுன்ஸிலராக சர்க்காரால் நியமிக்கப்பட்டிருப்பதும், மிஸ் பாலார்டு என்ற ஐரோப்பிய மாது ஜில்லா போர்டில் அங்கத்தினராய் நியமிக்கப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. இவர்கள் முனிசிபாலிடியிலும் ஜில்லா போர்டிலும் செய்யும் வேலையின் திறமையைப் பொறுத்தது மற்ற ஜில்லாக்களிலும் ஸ்திரீகளுக்கு இத்தகைய பொறுப்பு கிடைப்பது. ஆகையால், இவர்கள் தம்முடைய முழுசாமர்த்தியத்துடனும் பொது நன்மையை நாடி வேலைசெய்வார்கள் என்று நம்புகிறோம்.

***

சென்னையில் ஹைகோர்ட்டு ஜட்ஜாயிருந்து இப்போது ஜனஊழியத்தில் பாடுபடுபவரும் இந்திய லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளியாகிய சட்டசபையில் அங்கத்தினருமான சேஷகிரி ஐயர் அவர்கள் அச்சட்டசபையில் இரண்டு மசோதாச்சட்டங்கள் கொண்டுவந்திருக்கிறார். அதில் ஒன்று ஹிந்து சட்டத்தில் ஒருவனுடைய சொத்தை அவன் இறந்த பிறகு வரிஸாகடைவதில், சிற்சில வியாதிஸ்தர்களும் சிற்சில அங்கஹீனராயும் இருப்பவர்களுமடையக் கூடாதென்று ஸ்மிருதிக்காரர்கள் விதித்தி

க...
ஏற்படுகிறா...
பேரில் மிகவும் அபிமான...
தன்னுடைய சொத்தைக் கொ...
நினைக்கிறானோ, அவர்களில் சிலர் சட்டப்படி...
அடையக்கூடாதவர்களாவும், சிலர் தூரதாயாதிகளுக்கு...

பின் அடையக்கூடியவராயும் இருக்கின்றனர். இது ஜனங்களுடைய அபிப்பிராயத்திற்கு மாறாக இருக்கிறதென்று சட்டமசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. சகோதரனுடைய பேரனுக்குப்பிறகு சொத்துவைத்துவிட்டு இறந்து போனவனுடைய மகனுடைய பெண்ணாகிய பேத்தி (2) மகள் பெண்ணாகிய பேத்தி (3) சகோதரியின் மகன் (4) சகோதரி (5) ஒன்றோதர சகோதரி (6) அவளுடைய மகன் (7) மாற்றான் தாயார். இவர்களுக்குப்பின் தான் மிதாக்ஷர என்ற ஹிந்து சட்ட புஸ்தகத்தில் சொல்லப்பட்ட மற்ற வார்சுகள் அடையவேண்டும் என்றும், மேற்கூறியபடி ஸ்திரீகளும் புருஷர்களும் வரிசைக்கிரமமாய் முந்தியவர் இல்லாவிடில் பிந்தியவர் அடையவேண்டும் என்றும், ஹிந்து சட்டப்படி ஸ்திரீகளுக்கு என்ன உரிமையுண்டோ அவ்வுரிமையையே ஸ்திரீவார்சுகள் அடையக்கூடியவராயிருப்பார்கள் என்றும் இம்மசோதா சட்டமானது விதிக்கின்றது. இதில் ஹிந்து சட்டவிஷயமாய் திருத்தங்களை செய்யக்கூடாதென்று சிலர் வாதிக்கிறார்கள். சிலர் திருத்தங்களைச் சட்டசபைகளில் கொண்டுவரக்கூடாதென்கின்றனர். சிலர் வாரீஸாக இருக்கவேண்டியவர்களின் வரிசையை ஆக்ஷேபிக்கலாம். அது எப்படியிருந்தாலும்

!

யேடுப்பதில்

...ன் ஸென்சுரி லோஷன்.

...பயர் பெற்றது. எவ்வித இடத்திலிருந்தாலது

...தல ரோமங்களை மிக்க சுலபமாக எடுக்கும். எவ்வித எரிச்சல்

கிடையாது. ஒரு தடவை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

புட்டி 1-க்கு விலை ரூபா. 1—4—0. (தபால் செலவு இல்லை)

விலாசம்:— அமராவதி ஏஜன்ஸி,

பார்க் டவுன், மதராஸ்.

---

24 மணிநேரத்திற்குள் குணம்தரும்!

எங்களின் உலகப் பிரசித்தி பெற்ற

ரிங்குவரம் லோஷன்

இதை உபயோகிப்பதினால்; படை எச்சத்தளிம்பு, மேஹப் படை, சிறங்கு ரணங்கள், இவைகள் 24-மணி நேரத்திற்குள், குணமடையும், துணிகளுக்கு எவ்வித கறை உண்டாகாது நீடாற்ற நற்சாட்சி பத்திரங்கள் கிடைத்திருக்கிறது. ஒரு புட்டி வாங்கிப் பாருங்கள். விலை புட்டி 1-க்கு அணா 0—10—0.

விலாசம்:— அன்னபூரண ஸ்டோர்ஸ்,

பார்க் டவுன், மதராஸ்.

For Sale

ELEPHANT'S TEETH

யானை பல்லு

Any quantity at Rs. 2 a lb.

The Sovereign Company

Chenthatty Street

Trivandrum.

மனிதன் வ...

பிரஹ்மஞான விசாரத...

எனது பிரதிஜ்ஞை—ஜினராஜதா...

யோக உபந்யாசங்கள்—அன்னிபெஸண்டு

தபால் சார்ஜ் வேறு. பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.

எல்லாம் வல்ல ஈசன்.

இப்புத்தகம் பிரஹ்மஸ்ரீ கே. எஸ். இராமசந்திரையரவர்களால் தெளிவான நடையில் சம்பாஷணை ரூபமாய் எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகம் உருவத்தில் சிறியதாகவிருந்தாலும் அதில் அடங்கியிருக்கிற விஷயங்கள் மிகவும் பெருமை வாய்ந்தவைகள். இதில் சர்வேஸ்வரன் எல்லா வஸ்துக்களிடத்திலும் எல்லா பிராணிகளிடத்திலும்; இருக்கிறார் என்பதை எளிய நடையில் தக்க உபமானங்களுடனும் உபகதைகளுடனும் தெளிவாக எழுதப்பட்டிருப்பதால் பிரதம பள்ளிகளில் படிக்கும் சிறு மாணாக்கர்கள் முதல் யாவரும் படித்து உயர்நல உண்மைகளை எளிதில் அறியக்கூடும். [விலை அணா 1½]

சந்தியா வந்தனம்;

இப்புத்தகமும் பிரஹ்மஸ்ரீ கே. எஸ். இராமசந்திரையரவர்களால் சம்பாஷணை ரூபமாய் இயற்றப்பட்டுளது. சந்தியாவந்தன மந்திரத்தின் தாத்பரியம் இன்னதென்று தெரியாமல் நம்மவர்களில் அனேகர் நித்ய கர்மானுஷ்டானமான சந்தியா வந்தனத்தை அனுஷ்டித்துக்கொண்டு வருமறார்கள். அப்படிக்கில்லாமல் எல்லோருக்கும் அம்மந்திரங்களின் தாத்பரியம் இன்னதென்று விளக்கி விட்டால் சந்தியாவந்தனம் அனுஷ்டானம் செய்வதில் ஜனங்களுக்கு சிரத்தை அதிகப்படுமென்ற நோக்கத்துடன் ஷை தாத்பரியங்களை தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—2—0

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ் மதுரை.

...ராபிட்டீஸ்
...யாதுகளைக் கண்டி
...காரியத்திற்கும் ஆனந்தத்தி
...ரும் கைகண்ட முக்கியவிசேஷ குளி
...கைகள். இன்புளுயென்சா முதலிய
...தாத்து வியாதிகளை அணுக வொட்டாமல் தடுப்பதற்
இம் மாத்திரைகள் கிரம்பவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம். விலையோ சரசம்.

265 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ 1. 75 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 15 மாத்திரை பொட்டணம் 1 அணா.

ஹோல் ஏஜண்டுகள்:—

எல்' வைத்தியா அண்டு கோ.,

மதராஸ்.

பிராஞ்சிகள்:—திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள் டாபிலட்கள், பாலாமிருதம், மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கோ எஸ்ஸென்ஸ், பித்தளை மெழுகு வத்திஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்

எங்கள் மதுரை ஏஜண்டு:—

V. சின்னகிருஷ்ண நாயுடு,

கிருஷ்ணராஜா அண்டு கோ, மேலக்கோபுர வீதி மதுரை.